வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=


# ஈழநாடு
Eelanadu — ඊළනාඩු




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 19.10.2023 வியாழக்கிழமை | இதழ் : 314 | பக்கங்கள் : 16

## பழைய பகைகளை மறப்போம் சுதந்திர போரில் இணையுங்கள்!

**வடக்கு, கிழக்கு தமிழர்களை அழைக்கிறார் குணவங்ஸ தேரர்**



கொழும்பு, ஒக். 19

வடக்கு, கிழக்கு மாத்திரமல்ல முழு நாட்டையும் மீட்பதற்கு வாருங்கள். உங்களுக்கும் இல்லை - எங்களுக்கும் இல்லை. வாருங்கள் சுதந்திர போராட்டத்தை போன்று சுதந்திரத்தை பெற்று கொள்வதற்காக போராட வேண்டியுள்ளது. இரண்டாவது சுதந்திர போராட்டத்துக்காக அனைவரும் இணையவேண்டும்.

11


## எமது இன அடையாளத்தை அழித்தொழிப்பதற்கு முயற்சி!

**அமைச்சர் ஜீவன் தொண்டமான்**

கொழும்பு, ஒக். 19

இந்திய வம்சாவளி தமிழ் மக்களை "இலங்கை தமிழர்" என அடையாளப்படுத்த முற்படுவதானது எமது மக்களின் இன அடையாளத்தை அழித்தொழிக்கும் முயற்சியாகும். எனவே, பதிவாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ள சுற்று நிருபத்தையும் அவரது இந்த செயல்பாட்டையும் ஏற்றுக்கொள்ள முடியாது என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு

11



## சீன ஜனாதிபதியுடன் ஜனாதிபதி சந்திப்பு!

கொழும்பு, ஒக். 19

சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் சீன முதல் பெண் மணியையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முதல் பெண்மணி ஆகியோர் நேற்று சந்தித்தனர்.

இதன்போது, சீனாவின் பீஜிங்கில் சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் சீன முதல் பெண்மணி ஆகியோருடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் முதல் பெண் மணி மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோர் இணைந்து படம் எடுத்துக் கொண்டனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க "ஒரே மண்டலம் ஒரே பாதை" திட்டத்தின் மூன்றாவது சர்வதேச ஒத்துழைப்பு மாநாட்டுக்காக சீனா சென்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வடக்கில் மீன்பிடி தொழிலுக்கு தனியான முதலீட்டு வலயம்!

**கடற்றொழில் இராஜாங்க அமைச்சர்**

**இடைத்தரகர்களை அகற்றவும் வழிமுறை**



கொழும்பு, ஒக்ரோபர் 19

**மீன்பிடிக்கென வடக்கில் தனியான முதலீட்டு வலயம் ஒன்றை உருவாக்கும் பணி முன்னெடுக்கப்படுகிறது என்று கடற்றொழில் இராஜாங்க அமைச்சர் பியல் நிஷாந்த தெரிவித்தார்.**

இதன் ஊடாக அதிக எண்ணிக்கையிலான மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்க முடியும் என எதிர்பார்ப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

மீன்பிடித் தொழிலுக்கும் மட்டுமன்றி நுகர்வோருக்கும் பெரும் நட்டத்தை ஏற்படுத்தும் வகையில் இடைத்தரகர்கள் குழுவொன்று முறையற்ற இலாபம் ஈட்டும் மாபியாவை முடிவுக்குக் கொண்டுவர தேவையான நடவடிக்கைகள் ஏற்கனவே எடுக்கப்பட்டுள்ளன என்றும் அவர் இதன்போது கூறினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத்

11

## இரண்டாம் தவணை கடன் ஐ. எம். எவ். பேச்சு வெற்றி

**நிதி இராஜாங்க அமைச்சர்**

கொழும்பு, ஒக். 19

இரண்டாம் தவணை கடனை பெற்றுக்கொள்வதற்கான ஊழியர் மட்ட ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நோக்கில் சர்வதேச நாணய நிதியத்துடனான (ஐ. எம். எவ்.) பேச்சு வெற்றி அடைந்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இரண்டாம் தவணை கடன் எதிர்வரும் இரு வாரங்களில் வெளியிடப்படும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

11

## ஜனாதிபதியின் பணிப்புரைகளை பொலிஸார் செயல்படுத்தவில்லை!

**இரா. சாணக்கியன் எம். பி.**

**பொலிஸ் மா அதிபர் நாட்டில் இல்லாததால் யாரிடம் முறையிடுவது என்றும் கேள்வி**

மட்டக்களப்பு,ஒக். 19

மயிலத்தமடு - மாதவனை மேய்ச்சல் தரை விவகாரம் தொடர்பில் ஜனாதிபதி வழங்கிய பணிப்புரைகளை பொலிஸார் செயல்படுத்தவில்லை. நாட்டில் பொலிஸ்மா அதிபர் இல்லாத நிலையில் எவரிடம் இது தொடர்பில் முறையிடுவது?

இவ்வாறு சபையில் நேற்று கேள்வி எழுப்பினார் இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன்.

பாராளுமன்றில் நேற்று ஒழுங்குப்

11

## தேர்தலை நடத்துவதற்கு அரசு உறுதியாகவுள்ளது

**பிரதமர் தினேஷ் குணவர்த்தன**



கொழும்பு, ஒக். 19

தேர்தலை நாம் இரத்து செய்யவில்லை. தேர்தல் நடத்துவது தொடர்பில் அரசாங்கம் உறுதியான நிலைப்பாட்டிலேயே உள்ளது. நாடு வங்குரோத்து நிலையில் இருந்தபோதே உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பில் அறிவிக்கப்பட்டது. அந்த நிலையிலேயே நிதியமைச்சின்

11

## மின் கட்டணத்தை 18 வீதத்தால் அதிகரிப்பதற்கு கோரிக்கை!

**மின்சார சபை விடுத்தது**

கொழும்பு, ஒக். 19

மின்சார சபையால் கணிக்கப்பட்டுள்ள 3 ஆயிரத்து 200 கோடி ரூபாய் நட்டத்தை ஈடுகட்டுவதற்கு முன்னர் 22வீத கட்டண அதிகரிப்பு தேவைப்பட்டது. ஆனால், தற்போதைய நிலைமையை கருத்தில் கொண்டு 18 வீத மின் கட்டண அதிகரிப்பே போதுமானது என மின்சார சபை தெரிவித்துள்ளது.

இந்த வருடம் ஜூலை மாதம்

11

## வடக்கில் 9,543 ஏக்கர் காணி படைகளின் ஆக்கிரமிப்பில்

**சிறீதரன் எம். பி. பாராளுமன்றில் அறிக்கை**

கொழும்பு, ஒக். 19

வடக்கின் ஐந்து மாவட்டங்களிலும் 9 ஆயிரத்து 543. 18 ஏக்கர் காணிகள் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இந்தக் காணிகள் விடுவிக்கப்பட வேண்டும் என்று பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இது தொடர்பான விவர

11

## இராணுவம், பொலிஸாரால் வர்த்தகர்களுக்கு அச்சுறுத்தல்!

**செல்வம் அடைக்கலநாதன் குற்றச்சாட்டு**

கொழும்பு, ஒக். 19

இராணுவ, பொலிஸ் புலனாய்வு பிரிவினர் வியாபாரிகளை மிரட்டுகின்றனர் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு நீதிபதிக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் விதமாக நாளை வெள்ளிக் கிழமை ஹர்த்தாலுக்கு அழைப்பு

11

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது

நாளை நடைபெறவிருக்கும் ஹர்த்தாலைப் பற்றி இந்தப் பத்தியில் எழுதவேண்டியதெல்லாம் எழுதியாகிவிட்டது. ஆனாலும் நேற்றைய பத்திரிகையை படித்தபோது அதனையும் எழுதாமலிருக்க முடியவில்லை.

இதுநாள்வரை ஏழு கட்சிகள் கூட்டாக இந்த ஹர்த்தாலை நடத்துவது என்றுதான் அறிவிப்புகள் வெளியிடப்பட்டுவந்தன. புளொட், ரெலோ, தமிழரசு கட்சி, ஈ. பி. ஆர். எல். எவ்., சிறீகாந்தாவின் தமிழ் தேசியக் கட்சி, ஜனநாயக போராளிகள் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி ஆகிய கட்சிகளே இந்தப் போராட்டத்துக்கு அழைப்பு விடுத்தன. அழைப்பு விடுத்ததுடன் நின்றுவிடவில்லை, பல தடவைகள் கூடிப்பேசி ஹர்த்தால் முன்னாயத்தக் கூட்டங்களையும் நடத்தியிருந்தனர். அந்தக் கூட்டங்களிலும் தமிழரசு கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா கலந்துகொண்டே ஒவ்வொரு முடிவுகளும் எடுக்கப்பட்டன.

ஆனால், நேற்று முன்தினம்தான் தமிழரசு கட்சியின் அரசியல்குழு கூடி இந்தப் போராட்டத்துக்கு ஆத ரவு வழங்குவதா என்பது குறித்து ஆராய்ந்திருக்கின்றது. கட்சி தலைவரான மாவை சேனாதிராஜா இந்த ஏழு கட்சி கூட்டங்களில் கலந்துகொண்டபோது கட்சியின் அனுமதியை பெறாமலே அதில் கலந்துகொண்டார் என்பதையே இந்தக் கூட்டம் உணர்த்தியிருக்கின்றது.

இது பற்றி பலரும் கேள்வி எழுப்பி வருகின்றனர். ஆனால், ஒரு கட்சியின் தலைவருக்கு தமிழர் நலன் சார்ந்து ஓர் அரசியல் முன்னெடுப்பை நடத்துவதற்கான அதிகாரம்கூட இல்லையா என்றும் கேட்காமல் இருக்க முடியவில்லை.

கட்சியின் தலைவராக அவர் இனத்தின் நன்மைகருதி எடுக்கின்ற முடிவுகளை கட்சிக்குள் கேள்விக்கு உட்படுத்துவது கட்சியையே மக்கள் மத்தியில் பலவீனமாக்கும். அதனை உணர்ந்ததால்தானோ என்னவோ, அண்மையில் டான் ரீ. விக்கு அளித்த பேட்டியில் தமிழரசின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், தலைவர் முடிவெடுத்து அந்த போராட்டம் நடத்தப்படுகின்றபோது அதற்கு ஆதரவு வழங்கவேண்டியது தமது கடமைதானே என்று பதிலளித்திருந்தார்.

நாளைய ஹர்த்தாலுக்கு இன்று அனைத்துத் தரப்பினரும் ஆதரவு வழங்கிவிட்டதால், வழக்கம்போல வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருக்கும், திறக்கப்படுகின்ற கடைகளையும் மூடச் சொல்லிக் கேட்பதற்கும் சிலர் ஆங்காங்கே முயற்சி செய்வார்கள், இ. போ. ச. தவிர்ந்த தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடப்போவதில்லை. எல்லாம் முடங்கிவிடும். மறுநாள் பத்திரிகைகளில் என்ன செய்தி வரும் என்பதும் இப்போதே எழுதிவைத்திருக்கக் கூடியதாக இருக்கும்.

அதுவல்ல இன்று நாம் சொல்ல வருவது.

இந்த ஹர்த்தால் தொடர்பாக நடந்த தமிழரசின் அரசியல் குழுக் கூட்டத்தில் மெய்நிகர் வழியே கலந்துகொண்ட கட்சி அரசியல் குழு உறுப்பினர்கள் பலரும் தலைவர் மாவையர் தன்னிச்சையாக இப்படி முடிவெடுப்பது தவறு என்று குறைபட்டுக்கொண்டாலும் அந்த ஹர்த்தாலுக்கு தான் ஆதரவு இல்லை என்பதை பதிவுசெய்து வைக்குமாறு கட்சியின் சிரேஷ்ட துணைத் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சீ. வீ. கே. சிவஞானம் ஐயா கூறினாரென தமிழரசு வட்டாரங்கள் தெரிவித்தன.

அவரது கவலை எல்லாம் இந்த ஹர்த்தாலை விட இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதுகின்ற விடயத்தில்தான் தனது கடும் கண்டனத்தை பதிவுசெய்து வைக்குமாறு கேட்டிருக்கிறார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியை சந்தித்து தமிழ் மக்களின் நிலைமைகள் குறித்து தெளிவுபடுத்தி தீர்க்கமான முடிவொன்றை எட்டுவதற்கு தமிழ்த் தேசிய கட்சிகளைச் சேர்ந்த ஏழு கட்சிகள் இணைந்து கடிதம் ஒன்றை அனுப்பத் தயாராக உள்ளதாக சி. வி. விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தமை வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

அவ்வாறு இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதுகின்ற விடயத்தில் தமிழரசு கட்சி கலந்துகொள்ளக் கூடாது என்பதில் சிவஞானம் ஐயா கடும் தொனியில் தனது கண்டனங்களை அரசியல் குழுவில் பதிவு செய்திருக்கிறார்.

ஏற்கனவே, இதே ஏழுகட்சிகள் இந்தியப் பிரதமருக்கு ஒரு கடிதத்தை அனுப்பியிருந்தன. அந்தக் கடிதத்தில் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை முழுமையாக அமுல்படுத்துமாறு இலங்கைக்கு அழுத்தம் கொடுக்குமாறு கேட்கப்பட்டிருந்தது. தமிழரசின் சார்பில் சம்பந்தன் ஐயா அதில் கையெழுத்திட்டிருந்தார்.

அந்தக் கடிதம் தொடர்பாகவே விக்னேஸ்வரன் அண்மையில் சர்ச்சைக்குரிய கருத்து ஒன்றையும் தெரிவித்திருந்தார். தாம் அனுப்பிய கடிதம் இந்தியப் பிரதமரிடம் போய்ச் சேரவில்லை என்று அவர் தெரிவித்ததும், அதுபற்றி சுமந்திரன் அவரை கேலி செய்கின்ற வகையில் கருத்துச் சொன்னது பற்றியும் ஏற்கனவே இந்தப் பத்தியிலும் பார்த்திருந்தோம்.

ஒரு நாட்டின் பிரதமருக்கு கடிதம் எழுதுகின்றபோது, அதனை அந்த நாட்டின் தூதுவர் ஊடாக அனுப்புவதே இராஜதந்திர நடைமுறையாக இருந்து வருகின்றது. அப்படியிருக்கையில் தூதுவரிடம் தாங்கள் கொடுத்த கடிதம் இன்னமும் பிரதமரிடம் போய்ச் சேரவில்லை என்பது ஒட்டுமொத்த இந்தியாவையும் கேலி செய்கின்ற ஒரு செயல் என்றும் இந்தியாவின் நிர்வாகமே சரியில்லை என்று குற்றம்சாட்டுவதற்கு ஒப்பானது எனவும் பொங்கி எழுந்த சிவஞானம் ஐயா, அத்தகைய விக்னேஸ்வரனுடன் சேர்ந்து கடிதம் எழுவதைதான் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் தனது கருத்தை பதிவு செய்திருக்கின்றார்.

அப்படியான கண்டனங்கள், எதிர்ப்புகளுக்கு மத்தியிலும், கட்சித் தலைவர் மாவை, இந்தியப் பிரதமருக்கு கடிதம் எழுதுகின்ற விடயத்திலும் கட்சியின் ‘தலைவராக’ முடிவெடுப்பாரா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.!

-ஊர்க்குருவி.

# மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரமே தேர்தல் முறையை சீரமைக்கின்றது அரசு

## சபையில் கூறினார் பிரதமர் தினேஷ்

கொழும்பு, ஒக். 19

கடந்த தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணையின் பிரகாரம்தான் பாராளுமன்றத் தேர்தல் முறையை மறுசீரமைக்கும் யோசனையை அரசாங்கம் முன்வைத்துள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை தேர்தல்முறை மறுசீரமைப்புக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடும் எதிர்ப்பை வெளியிட்டிருந்த நிலையில் அதற்கு பதிலளிக்கும்போதே பிரதமர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்றத் தேர்தல் முறையை மறுசீரமைத்து கலப்பு தேர்தல்முறையொன்று உருவாக்கப்படும் என்றே மக்கள் ஆணையை கடந்த தேர்தலில் பெற்றோம்.

அதனை எமது அரசாங்கத்தின் தலைவர்கள் பலமுறை பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளனர். அதேபோன்று வரவு - செலவுத்திட்டங்களுக்கான அனுமதிகளை பெறும் போது கூறியுள்ளோம்.

தேர்தல் ஆணைக்குழுவின் செயல்பாடுகள் தொடர்பில் இரண்டு தரப்பினரும் பாராளுமன்றில் கருத்துகளை பகிர்ந்துள்ளோம்.

அதன் பிரகாரம் பாராளுமன்ற மற்றும் மாகாணசபைத் தேர்தல்களை மாற்றும் கலப்பு தேர்தல் முறை பற்றிய யோசனையொன்று நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷவால் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றில் அனைத்துக் கட்சிகளுடனும் கலந்துரையாடல்கள் நடாத்திய பின்னர் மீண்டும் யோசனைகளை சமர்ப்பிக்க தீர்மானிக்கப்பட்டது.

அதன் பிரகாரம் நேற்று பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் அனைத்துக் கட்சிகளுக்கும் கலந்துரையாடல் நடத்துவதற்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதில் கலந்துகொள்ளமாட்டோம் என எதிர்க்கட்சித் தலைவர் கூறியுள்ளார். ஆனால், இந்த விடயம் தொடர்பில் சந்தேகம் கொள்ளாது கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கிறேன்.

சந்தேகங்கள் கொண்டு அரசியல் மாற்றங்களை செய்ய முடியாது. 20 மற்றும் 22ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் பலமுறை கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டுதான் அவை நிறைவேற்றப்பட்டன. ஆகவே, வெளிப்படைத்தன்மை யுடன்தான் நாம் இந்தப் பணிகளை முன்னெடுக்கிறோம்.

தேர்தல்முறையில் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமென மக்கள் எதிர்பார்த்துள்ளனர். சில பிரதேசங்களுக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் இல்லாதுள்ளார். இதனால் இந்தப் பணியை முன்னெடுக்க வேண்டியுள்ளது - என்றார். (அ)

# நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்துக்கு எதிராக இதுவரை 45 மனுக்கள் தாக்கல்

கொழும்பு, ஒக். 19

அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் இதுவரை 45 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நேற்று பாராளுமன்றத்தில் இந்த விடயத்தை தெரிவித்தார்.

நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸினால் கடந்த 3ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

குறித்த சட்டமூலமானது நாட்டின் சில அறிக்கைகளில் தகவல் தொடர்புகளைத் தடைசெய்வதனை நோக்கமாகக் கொண்டுள்ளது என விமர்சனம் முன்வைக்கப்பட்டது.

அத்துடன், இந்த சட்டமூலம் தொடர்பில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் மற்றும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆகியன கவலை தெரிவித்தன.

இந்த நிலையிலே, கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, சோசலிச இளைஞர் சங்கம், ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்திம பண்டார, பாராளுமன்ற உறுப்பினர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் பல ஊடகவியலாளர்களினால் நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்திற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டன.

இதனிடையே, நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலம் அமுல்படுத்தப்படும் நிலையில் இலங்கை பாரதூரமான விளைவுகளை சந்திக்க நேரிடும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

# பொன். செல்வராசாவுக்கு தமிழரசு கட்சி அஞ்சலி

யாழ்ப்பாணம், ஒக். 19

இலங்கை தமிழரசு கட்சியின் சிரேஷ்ட தலைவர் பொன். செல்வராசாவின் மறைவுக்கு அந்தக் கட்சியின் யாழ்ப்பாண தொகுதிக் கிளை அஞ்சலி செலுத்தியுள்ளது.

கடந்த 15ஆம் திகதி நடைபெற்ற தொகுதி கிளையின் தலைவர் சூ. சிறில் தலைமையில் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே பொன். செல்வராசாவுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது.

தமிழரசு கட்சியின் சிரேஷ்ட தலைவரும் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பொன். செல்வராசா கடந்த 13ஆம் திகதி காலமானார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# இந்திய போர் கப்பல் ஐராவத் நேற்று கொழும்பு வந்தது!

கொழும்பு, ஒக். 19

இந்திய கடற்படைக்கு சொந்தமான “ஐ.என்.எஸ். ஐராவத்” போர்க் கப்பல் நேற்று புதன்கிழமை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது. இலங்கை கடற்படையினரால் குறித்த கப்பல் சம்பிரதாயபூர்வமாக வரவேற்கப்பட்டது.

ஐராவத் கப்பல் கப்டன் ரிந்து பாபு மற்றும் மேற்கு கடற்படை கட்டளை தளபதி ரியர் அட்மிரல் சமன் பெரேராவுக்கும் இடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பும் நேற்று மேற்கு கடற்படை கட்டளைத் தலைமையகத்தில் நடைபெற்றது.

மேலும் , “ ஐஎன்எஸ் ஐராவத்“ என்ற கப்பலானது, நாட்டில் நங்கூரமிடப்பட்டிருக்கும் காலப்பகுதியில் கூட்டு பயிற்சியில் ஈடுபடவுள்ளது. பயிற்சிகள் நிறைவடைந்த பின்னர் நாளை வெள்ளிக்கிழமை கப்பல் மீண்டும் இந்தியா நோக்கி பயணமாகவுள்ளது. (ஐ)

Eelanadu
19.10.2023 வியாழக்கிழமை
சோபகிருது வருடம், ஐப்பசி 02

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ளத் தவறினால்

காஸாவை முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் நோக்கில் இஸ்ரேல் தொடர்ந்தும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது. எவராலும் இஸ்ரேலை கட்டுப்படுத்த முடியவில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் வேண்டுகோளை இஸ்ரேல் நிராகரித்துவிட்டது. ஹமாஸுக்கு முடிவு கட்டாமல் விடப்போவதில்லையென்று இஸ்ரேலிய பிரதமர் சூளுரைத்திருக்கின்றார். உண்மையில் ஹமாஸின் மீது எவரும் பரிவு காட்டப்போவதில்லை. ஆனால், மக்கள் பெருந்தொகையில் கொல்லப்படும் நிலைமை தொடர்பில் வழமைபோல் வார்த்தைகளால் கரிசனைகள் காண்பிக்கப்படுகின்றன. முள்ளிவாய்க்கால் அவலத்தின்போது சிலர் கரிசனை காண்பித்தது போன்று.

மக்கள் வெளியேறுவதற்கு இஸ்ரேல் வழங்கிய கால அவகாசம் முடிந்திருக்கும் நிலையில் - இஸ்ரேலை பொறுத்தவரையில் அப்பகுதியிலிருந்து ஹமாஸை அகற்றுவது மட்டுமே இலக்காக இருக்கின்றது. தொடர் தாக்குதல்களால் பல்லாயிரக்கணக்கில் மக்கள் கொல்லப்பட்டனர் என்று பல்வேறு தகவல்கள் வெளிவருகின்றன. இதன் உச்சமாக மருத்துவமனையின்மீது குண்டுகள் விழுந்ததில் 500 பேர் ஒரு சில மணித்துளிகளில் கொல்லப்பட்டனர். வழமைபோல் சில நாடுகளின் தலைவர்கள் தங்கள் கண்டனங்களை பதிவு செய்திருக்கின்றனர். இதுவும் கடந்து போகும். ஆனால், யுத்தம் தொடரத்தான் போகின்றது. யுத்தம் தீவிரமடைந்திருக்கின்ற நிலையில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் இஸ்ரேலுக்கு விஜயம் செய்திருக்கின்றார். அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள அமெரிக்க தேர்தலில் இந்த யுத்தம் தாக்கங்களை ஏற்படுத்துவதற்கு வாய்ப்புண்டு.

உண்மையில், இவ்வாறானதொரு யுத்தம் நடைபெறுவதற்கான முழுக் காரணமும் ஹமாஸ்தான். இஸ்ரேல் மீது ஹமாஸ் திடீர் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டு, ஆயிரக்கணக்கான யூதர்களை கொன்ற நிலையில்தான் இஸ்ரேல் யுத்தத்தை பிரகடனம் செய்தது. இந்த யுத்தத்துக்கான முழுப் பொறுப்பும் ஹமாஸை சார்ந்தது. ஈரானிய தேவைக்காக ஹமாஸால் முன்னெடுக்கப்பட்ட யுத்தத்தின் விளைவை அப்பாவி பலஸ்தீன மக்கள் எதிர்கொள்கின்றனர். இந்த யுத்தம் இன்னோர் உண்மையையும் வெளிக்கொணர்ந்திருக்கின்றது. அதாவது, பலஸ்தீனத்துக்கான அரசியல் உரிமைகள் ஏற்கனவே உறுதிப்படுத்தப்பட்டுவிட்டன. பலஸ்தீனம் ஐக்கிய நாடுகள் சபையால் ஒரு தேசமாக அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றது. ஆனாலும், பலஸ்தீனியர்கள் தொடர்ந்தும் நெருக்கடிக்குள்ளேயே வாழ்ந்து வருகின்றனர். ஏனெனில், கிடைத்த உச்சபட்சமான தீர்வை மக்கள் உச்சளவில் அனுபவிப்பதற்கு ஏற்றவாறான சூழலை பலஸ்தீன அரசியல் தலைமைகள் ஏற்படுத்தவில்லை. ஹமாஸ் தங்களுடைய சியோனிச எதிர்ப்பு அரசியலுக்காக மக்களை பலி கொடுத்துவருகின்றனர்.

அதிகாரம் கிடைத்தும் அதனை பலஸ்தீனியர்களால் முழுமையாக அனுபவிக்க முடியவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில், பலஸ்தீனம் ஒரு தேசம் என்னும் அடிப்படையிலான அரசியல் தீர்வு தோல்வியடைந்துவிட்டது. நமது சூழலிலும் ஒரு குழுவினர் ஒரு நாடு இரண்டு தேசம் என்று பேசிவருகின்றனர். ஆனால், விடயமோ எவ்வாறான தீர்வாக இருந்தாலும், முரண்பாடான உறவைக் கொண்டிருந்த அதிகாரமுள்ள ஏனைய தரப்போடு மோதல் போக்கை கடைப்பிடித்தால் அடைந்த தீர்வைக்கூட முழுமையாக அனுபவிக்க முடியாமல் போகும். இதற்கு இஸ்ரேல் - ஹமாஸ் யுத்தம் ஒரு சிறந்த உதாரணமாகும்.

அரசியலில் அடைவு என்பதை எவ்வாறு புரிந்துகொள்வது? காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்ளுதல் என்னும் அடிப்படையில்தான் அரசியலில் வாய்ப்புகளை நோக்க வேண்டும். வாய்ப்புகளை தவறவிட்டுவிட்டு என்னதான் விளக்கங்கள் அளித்தாலும் அதனால் பயனில்லை. அது பேருந்தை தவறவிட்டுவிட்டு பின்னால் கையசைப்பதற்கு ஒப்பானது.





# கதவடைப்புக்கு ஆதரவு கோரி துண்டுப்பிரசுரம் விநியோகம்

## யாழ்ப்பாணத்தில் நேற்று ஆரம்பம்

*யாழ்ப்பாணம், ஒக். 19*

வடக்கு-கிழக்கு முழுவதும் எதிர்வரும் 20 ஆம் திகதி முன்னெடுக்கப்பட உள்ள கதவடைப்புக்கு ஆதரவு கோரி யாழ்ப்பாணத்தில் நேற்று துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கட்சிகள் இணைந்து அழைப்பு விடுத்துள்ள இக் கதவடைப்புக்கு ஆதரவு வழங்கக் கோரி வடக்கு - கிழக்கு முழுவதும் துண்டுப் பிரசுர விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலி மற்றும் மருதனார்மடம் சந்தைகளில் முதற்கட்டமாக நேற்றுக் காலை துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

கதவடைப்புக்கு ஆதரவு கோரும் பிரசார நடவடிக்கையில் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், வடமாகாண முன்னாள் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், வடக்கு மாகாண சந்தை வியாபாரிகள் ஒன்றியத் தலைவர் சி.முகுந்தன் மற்றும் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இதனைத் தொடர்ந்து அனைத்து இடங்களிலும் தமிழ்க் கட்சிகளினால் இத் துண்டுப்பிரசுரங்கள் விநியோகிக்கும் செயற்பாடுகளை முன்னெடுக்க உள்ளதாகவும் கட்சித் தலைவர்கள் அறிவித்துள்ளனர். (அ-2)

# யாழ்.பஸ் நிலையத்தில் பிறந்தநாள் கொண்டாடிய மேலும் 5 பேர் கைது!

*யாழ்ப்பாணம், ஒக். 19*

யாழ்ப்பாண மத்திய பஸ் நிலையத்தில் பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்து , அவர்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தும் விதமாக பிறந்தநாள் கொண்டாடிய கும்பலைச் சேர்ந்த மேலும் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்ட பிராந்திய குற்றத் தடுப்பு பிரிவு பொலிஸாரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

யாழ்.மத்திய பஸ் நிலையத்துக்கு 50 இற்கும் மேற்பட்ட மோட்டார் சைக்கிளில் வந்த 150 இற்கும் மேற்பட்ட இளைஞர்கள் அண்மையில் ஒன்று கூடி, பஸ் நிலையத்தில் ஒருவரின் பிறந்தநாளை கேக் வெட்டி கொண்டாடியுள்ளனர்.

அந்த நபரின் பிறந்தநாள், அன்றைய தினத்தில் மட்டும் 4 இடங்களில் கொண்டாடப்பட்டுள்ளது.

மத்திய பஸ் நிலையத்தில் பிறந்தநாள் கொண்டாடப்படுவதற்கு முன்னதாக, பஸ்களை அப்புறுப்படுத்துமாறும் மிரட்டியுள்ளனர். பிறந்தநாள் கொண்டாட்டத்தை ரிக்ரொக் சமூக ஊடகத்திலும் பகிர்ந்திருந்தனர்.

பஸ் நிலையத்துக்குள் நுழைந்து, பொது மக்களை மிரட்டி, பிறந்தநாள் கொண்டாடியபோது, யாழ்ப்பாண பொலிஸாருக்கு தொலைபேசி ஊடாக அறிவிக்கப்பட்ட போதிலும் பொலிஸார் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை.

யாழ்.நகர் மத்தியில் சன நெருக்கடியான நேரத்தில் சட்டவிரோதமான முறையில் ஒன்று கூடி பிறந்தநாள் கொண்டாடியுள்ளார்கள். அது தொடர்பில் பொலிஸார் நடவடிக்கை எடுக்காதமை குறித்து பலரும் விசனம் தெரிவித்து இருந்தனர்.


அதனை அடுத்து சட்டவிரோதமான முறையில் கூட்டம் கூடி பிறந்தநாள் கொண்டாடி , மக்களின் இயல்பு வாழ்வுக்கு இடையூறு ஏற்படுத்தியதுடன் மக்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களின் கீழ் கொண்டாட்டத்தில் ஈடுபட்டவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் இருவரை கைது செய்து கடந்த சனிக்கிழமை நீதவான் முன்னிலையில் முற்படுத்தி இருந்தனர்.

அவர்களை 14 நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட நீதவான் , சம்பவத்துடன் தொடர்புடைய பிறந்தநாள்காரர் உள்ளிட்ட அனைவரையும் கைது செய்து முற்படுத்தவேண்டும் என பொலிஸாருக்கு பணித்திருந்தார்.

அதனை அடுத்து பொலிஸார் அனைவரையும் கைது செய்வதற்கு தீவிர நடவடிக்கைகளை முன்னெடுத்த நிலையில் ஐந்து பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’






**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**இடபம்**
உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு. திறமைகள் வெளிப்படும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். அரசால் அனுகூலம் உண்டு. வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. அதிகாரிகள் புது பொறுப்பை ஒப்படைப்பார். தொட்டது துலங்கும் நாள்.

**கடகம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**சிம்மம்**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். நல்லன நடக்கும் நாள்.

**கன்னி**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வீடு மற்றும் வாகனத்தை சீர் செய்வீர்கள். உத்தியோகத்தில் உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். வெற்றி பெறும் நாள்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். மன நிம்மதி ஏற்படும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் எந்த வேலைகளைதயும் முடிக்க முடியாமல் தடை தாமதங்கள் ஏற்படும். விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நாள்.

**தனுசு**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து போகும். செலவுகள் ஏற்படும். அசதி சோர்வு வந்து விலகும். மறைமுக எதிர்ப்புகள் வரக்கூடும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**மகரம்**
எதையும் சாதிக்கும் துணிச்சல் பிறக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**கும்பம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். உத்தியோகத்தில் புதிய வாய்ப்புகள் தேடி வரும். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**மீனம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

# 27 இந்திய மீனவர்கள் கைது இராமேஸ்வரத்தில் போராட்டம்!

*இராமேஸ்வரம், ஒக். 19*

இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள இராமேஸ்வரம் மீனவர்கள் 27 பேருடன் 5 படகுகளை விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி தபால் அலுவலம் முன்பாக நேற்று புதன்கிழமை மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இராமநாதபுரம் மாவட்டம், ராமேசுவரத்தில் 750இற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் உள்ளன. இதில், 3,500 மீனவர்கள் மற்றும் சார் தொழிலாளர்கள் என 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் ஈடுபட்டுள்ளனர். முழுமையாக மீன்பிடி தொழிலை நம்பியே இவர்களின் வாழ்வாதாரம் உள்ளது.

இந்நிலையில், இவர்களில் 27 பேர் கைது செய்யப்பட்டனர். இலங்கை கடற்படையினர் இந்த நடவடிக்கையை கண்டித்தும், மீனவர்கள் மற்றும் படகுகளை விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை வலியுறுத்தி இராமேஸ்வரம் வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டம் மூன்றாவது நாளாக நடைபெற்றது.



இதே கோரிக்கையை வலியுறுத்தி ராமேஸ்வரம் தபால் அலுவலகம் முன்பு அனைத்து விசைப்படகு மீனவ சங்கம் சார்பில் மீனவ சங்க தலைவர் என்.ஜே.போஸ் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் பல நூறு பேர் பங்கேற்றனர். (ஐ)

# இந்திய மீனவர்கள் மீது கடற்கொள்ளையர் தாக்குதல்!

*நாகப்பட்டினம், ஒக். 19*


கோடியகரை அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்த நாகை மீனவர்கள் மீது இலங்கைக் கடல் கொள்ளையர் நேற்று தாக்கியதில் 9 பேர் நாகப்பட்டினம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

நாகப்பட்டினத்தில் இருந்து 9 மீனவர்கள் விசைப் படகுகளில் மீனவர்கள் மீன் வளம், மீனவர் நலத் துறையினரிடம் அனுமதி பெற்று செவ்வாய்க்கிழமை கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்றனர்.

இவர்கள் கோடியக்கரை அருகே மீன்பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது, அங்கு வந்த இலங்கை கடற்கொள்ளைர்கள் மீனவர்களை தாக்கி கடலில் தள்ளி சித்திரவதை செய்துள்ளனர். மேலும், விசைப் படகில் இருந்த 5 இலட்சம் (இந்திய) ரூபாய் மதிப்புள்ள 700 கிலோ மீன்பிடி வலைகள், ஜி. பி. எஸ். கருவிகள், தங்க சங்கிலியை பறித்துச் சென்றனர் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# நாங்கள் வளர்ந்தாலே திராவிடம் வீழ்ந்து விடும்!

## நாம் தமிழர் சீமான்



*சென்னை, ஒக். 19*

தமிழகத்தை, 60 ஆண்டுகளாக திராவிட கட்சிகள் ஆண்டு விட்டன. திராவிட கட்சிகளை அழிப்போம். அழிந்து போகும். நாங்கள் வளர்ந்தாலே திராவிடம் வீழ்ந்து விடும் - இவ்வாறு தெரிவித்திருக்கிறார் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான்.

நாம் தமிழர் கட்சி ஆரம்பித்து, 13 ஆண்டுகளாகிறது. ஒரு கோடி முறை கூறிவிட்டேன். வரும் பாராளுமன்றத் தேர்தலில், யாருடனும் கூட்டணி கிடையாது. மக்களை நம்பியே இருக்கிறேன். நாங்கள் கடுமையாக உழைக்கிறோம் வெற்றி பெறுவோம்.

கல்வி, மருத்துவம், தண்ணீர் என, எல்லாவற்றையும் விற்றுவிட்ட நிலையில், தற்போது குழந்தைகளை விற்று வருகின்றனர். மூளைச்சாவு என்ற நோயை உருவாக்கி, மனிதனின் உடல் உறுப்புகளை விற்கின்றனர். அரசே மண்ணையும் மலையையும் விற்பனை செய்து விட்டது.

தமிழகம் என்பது கருணாநிதி மற்றும் அவர்களை சார்ந்தவர்களின் 90 சதவீத சொத்தாக உள்ளது. ஒழுகும் பள்ளிகளை சீரமைக்க முடியாத அரசு, பல கோடி ரூபாய் செலவு செய்து சமாதி கட்டுகிறது. தேர்தல் வாக்குறுதிகளை 100 சதவீதம் நிறைவேற்றி விட்டதாக முதல்வர் கூறுகிறார். ஆனால், ஆசிரியர்கள், செவிலியர்கள் எதற்காக போராட்டம் நடத்துகின்றனர்.

ஜெயிலர் திரைப்படத்திற்கு எவ்வித இடையூறும் வரவில்லை. விஜய் நடித்த, 'லியோ' படத்திற்கு, இசை வெளியீட்டு விழாவில் இருந்தே பிரச்னைதான். திரையரங்குகள் அவர்களிடம் இருப்பதால்தான் மிரட்டி வருகின்றனர். அவர் நடிப்பதை நிறுத்தி விட்டால் என்ன செய்ய முடியும். தேவையில்லாமல் நடிகர் விஜயை சீண்டி விட்டீர்கள்.

தமிழகத்தை, 60 ஆண்டுகளாக திராவிட கட்சிகள் ஆண்டு விட்டன. திராவிட கட்சிகளை அழிப்போம். அழிந்து போகும். நாங்கள் வளர்ந்தாலே திராவிடம் வீழ்ந்து விடும். (ஐ)

# பாராளுமன்றத் தெரிவுக் குழுவில் இணைய சஜித் அணி நிபந்தனை!

கொழும்பு, ஒக். 19

**உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பில் 'சனல் 4' காணொளியில் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகளை விசாரணை செய்வதற்கான பாராளுமன்ற தெரிவுக்குழுவில் இடம்பெறுவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி மூன்று நிபந்தனைகளை முன்வைத்துள்ளது.**

இதன்படி மேற்படி தெரிவுக் குழுவின் தலைவரை பெயரிடுவதற்கான அதிகாரம் எதிரணிக்கு வழங்கப்பட வேண்டும் எனவும், தெரிவுக்குழுவில் இடம்பெறும் உறுப்பினர்களின் எண்ணிக்கை ஆளுங்கட்சி மற்றும் எதிரணிக்கு சமமாக இருக்க வேண்டும் என்பனவே அவையாகும்.

பாராளுமன்றம் நேற்று முன்தினம் முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் கூடியது.

இதன்போது " உயிர்த்த ஞாயிறு தினத்தன்று மேற்கொள்ளப்பட்ட தற்கொலை குண்டுத் தாக்குதல் தொடர்பில் பிரித்தானிய "சனல் 4" அலைவரிசையினால் ஒளிபரப்பப்பட்ட நிகழ்ச்சியின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை விசாரணை செய்தற்கான பாராளுமன்றத் தெரிவுக்குழு" யோசனையை ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினரான மேஜர் பிரதீப் உந்துகொட முன்வைத்தார்.

மகிந்த ராஜபக்ஷ, வஜிர அபேவர்தன உட்பட ஆளுங்கட்சி எம்.பிக்கள் பலர் அந்த யோசனையில் கையொப்பமிட்டுள்ளனர். இந்த யோசனையின் பிரகாரம் தெரிவுக்குழுவுக்கான உறுப்பினர்களை சபாநாயகர் பெயரிடவேண்டும். அதில் இருந்து தலைவர் ஒருவர் தெரிவு செய்யப்படுவார்.

இந்நிலையில் பாராளுமன்றத்தில் இந்த தெரிவுக்குழு யோசனை தொடர்பில் கருத்து வெளியிட்ட எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, இந்த பாராளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பில் நம்பிக்கை இல்லை என சுட்டிக்காட்டி மூன்று யோசனைகளை முன்வைத்தார். உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதிக்கான தேசிய கத்தோலிக்க திருச்சபையும் இதே யோசனைகளை முன்வைத்துள்ளது.

1. உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் சர்வதேச சுயாதீன விசாரணைக் குழுவின் மேற்பார்வையில் இடம்பெறவேண்டும்.

2. இந்த விசாரணை குழுவுக்காக நியமிக்கப்படும் உள்நாட்டு உறுப்பினர்களில், பல்வேறு பகுதிகளுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ள சி.ஐ.டி அதிகாரிகளை உள்ளீர்க்கப்படவேண்டும்.

3. குற்றச்சாட்டுகளுக்கு உள்ளாகியுள்ள அதிகாரிகள், விசாரணை நடத்தப்படும்வரை இடைநிறுத்தப்பட வேண்டும்." - என்றார்.

அதேவேளை, பாராளுமன்றத் தெரிவுக்குழு ஏற்புடையதாக அமைய வேண்டும் எனில்- அதேபோல எமக்கு ஏற்றுக்கொள்ளக்கூடியதாக அமையவேண்டுமெனில் கீழ்வரும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படவேண்டும்.

பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவரை பெயரிடுவதற்கான பொறுப்பு எமக்கு (பிரதான எதிர்க்கட்சிக்கு) வழங்கப்படவேண்டும், அமெரிக்காவில் நடத்தப்பட்ட 9/11 தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக நியமிக்கப்பட்ட குழுவில் சமமாக ஆளும், எதிரணி உறுப்பினர்கள் (தலா 5 பேர் வீதம்) இடம்பெற்றிருந்தனர். இந்த கட்டமைப்பில் தெரிவுக் குழு அமைய வேண்டும், அவ்வாறு இல்லாவிட்டால் தெரிவுக்குழுவில் இணைய முடியாது -எனவும் எதிர்க்கட்சி தலைவர் அறிவிப்பு விடுத்தார். (அ)

# டயானா கமகேயின் பதவி நீக்கம் குறித்த விசாரணை ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக். 19

இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவின் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்துச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான வழக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

டயானா கமகே ஒரு பிரித்தானிய பிரஜை. ஆகவே அவரது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இரத்து செய்யவேண்டும் என சமூக செயற்பாட்டாளர் ஓஷல ஹேரத்வினால் குறித்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த நிலையில் குறித்த வழக்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதி நிஷங்க பந்துல கருணாரத்ன தலைமையில நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் நீதிபதிகள் நிஷங்க பந்துல கருணாரத்ன, கேமா ஸ்வர்ணாதிபி மற்றும் ஏ. மரிக்கார் ஆகிய மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் முன்னிலையில் குறித்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ஐக்கிய மக்கள் சக்தியில் இணையப்போவதில்லை

**அலி சாஹிர் மௌலானா கூறுகிறார்**

கொழும்பு, ஒக். 19

பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா தொடர்ந்து எதிர்க்கட்சியிலேயே செயற்படுவேன் என்றும் நசீர் அஹமட் போன்று தவறான முடிவுகளை எடுக்கப் போவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவைத் தான் சந்தித்ததாகவும் ஐக்கிய மக்கள் சக்தியில் தான் இணையவுள்ளதாக வெளியான செய்திகளை தான் முழுமையாக மறுப்பதாகவும் அவர் கூறினார்.

எதிர்க்கட்சித் தலைவர் என்ற முறையில் தான் அவரை சந்தித்ததாகவும் அவரை ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் சந்திக்கவில்லை என்றும் பாராளுமன்ற உறுப்பினர் அலி சாஹிர் மௌலானா குறிப்பிட்டார்.

ஒரு தலைப்பட்சமாக அரசாங்கத்துக்கு ஆதரவை வழங்கப்போவதில்லை என்றும் கட்சி அத்தகைய முடிவை எடுத்தால் மட்டுமே அவ்வாறு செய்வதாகவும் அவர் கூறினார். (அ)

# ஏ.ரி.எம் கொள்ளையர்கள் சிக்கினர்



கொழும்பு, ஒக். 19

மதுரங்குளியில் உள்ள தனியார் வங்கிக்கு சொந்தமான ஏடிஎம்மில் இருந்து ஒரு கோடி ரூபாய்க்கு மேல் திருடப்பட்ட வழக்கில் தனியார் பாதுகாப்பு நிறுவனத்தில் பணிபுரியும் இருவர் உள்ளிட்ட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

திருடப்பட்ட பணத்தில் இருபது இலட்சத்து எழுபதாயிரம் ரூபாவும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக புத்தளம் பிரிவு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

கடந்த 7ஆம் திகதி இரவு, தானியங்கி பணப்பரிவர்த்தனை இயந்திரத்தின் பராமரிப்புப் பணியாளர்கள் போல் நடித்து, சாவி மற்றும் அதற்கான இரகசிய எண்களை முறையாக பயன்படுத்தி, கிட்டத்தட்ட 105 இலட்சம் ரூபாயை திருடிச் சென்றதாகக் கூறப்படுகிறது. (அ)

# மின்கட்டணம் 18 வீதத்தால் அதிகரிக்கப்படவேண்டும்

கொழும்பு, ஒக். 19

மின்கட்டணம் 18 சதவீதத்தால் அதிகரிக்கப்பட வேண்டும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

உத்தேச மின்கட்டண திருத்தம் தொடர்பான யோசனைகளை முன்வைக்கும் செயலமர்வில் கலந்து கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த இலங்கை மின்சார சபையின் பதில் பொது முகாமையாளர் நரேந்திர சில்வா இதனைக் குறிப்பிட்டார்.

மின்கட்டண திருத்தம் தொடர்பான கருத்துக்கள் மற்றும் ஆலோசனைகள் என்பவற்றை வாய்மொழியாக பெறும் செயற்பாடு நேற்று இடம்பெற்றது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முற்பகல் 9 மணிமுதல் இந்த செயற்பாடு ஆரம்பமானதாக பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மின்சாரக் கட்டணத்தை 22 சதவீதத்தால் அதிகரிப்பதற்கு இலங்கை மின்சார சபை சமர்ப்பித்த தரவுகளில் முரண்பாடுகள் காணப்படுவதால், மின்கட்டணத்தை மீள மதிப்பிடுமாறு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அண்மையில் இலங்கை மின்சார சபைக்கு எழுத்து மூலம் அறிவித்திருந்தது.

இதன்படி, இலங்கை மின்சார சபையின் பொது முகாமையாளர் இதற்கான பதில் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

எதிர்வரும் இரண்டு வருடங்களுக்கு மின்சார கட்டணத்தை 10 சதவீதத்தால் அதிகரிக்க வேண்டிய தேவை இருப்பதாக அவர் குறித்த கடிதத்தில் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு அறியப்படுத்தியுள்ளார். (அ)

# ஹர்த்தாலுக்கு எதிர்ப்பு தெரிவித்து அச்சுவேலியில் ஒருவர் போராட்டம்!



யாழ்ப்பாணம், ஒக். 19

தமிழ் கட்சிகளினால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ள ஹர்த்தாலுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று அச்சுவேலி நகரில் தனிநபர் ஒருவரினால் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

ஹர்த்தால் தேவையில்லை எனவும் அரசியல் வாதிகளின் தேவைக்காக மக்களை பலியாகாக்காதீர்கள் எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட நபர் கோரிக்கை விடுத்தார். (அ)

# ஹோட்டல்கள், உணவகங்களுக்கு மது அனுமதிப்பத்திரம் நிறுத்தம்

கொழும்பு, ஒக். 19

ஹோட்டல்கள் மற்றும் உணவகங்களுக்கு மதுபான அனுமதிப்பத்திரம் வழங்குவதை தற்காலிகமாக நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கலால் திணைக்களத்தின் மேலதிக ஆணையாளர் நாயகம் கபில குமாரசிங்க நேற்று புதன்கிழமை இதனை தெரிவித்தார்.

நீதிமன்ற உத்தரவுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கபில குமாரசிங்க குறிப்பிட்டார். (அ)

# சுயதொழில் செய்பவர்களுக்கும் ஓய்வூதியத் திட்டம் மிகவிரைவில்

கொழும்பு, ஒக். 19

சுயதொழில் செய்பவர்களுக்கு ஓய்வூதியத் திட்டத்தை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுபா பஸ்குவல் தெரிவித்தார்.

இதற்கான பிரேரணை நிதி அமைச்சிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் கூறினார்.

இலங்கை சமூகப் பாதுகாப்புச் சபைச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு நிதியமைச்சிடம் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (அ)

# தேர்தலை பிற்போடும் செயல்பாட்டை அரசு உடனடியாக நிறுத்தவேண்டும்!

## சபையில் சஜித் பிரேமதாஸ எச்சரிக்கை

கொழும்பு, ஒக். 19

**தேர்தலை பிற்போட அரசாங்கம் எடுக்கும் முயற்சிகளுக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒரு போதும் ஆதரவளிக்காது. தேர்தலைப் பிற்போடுவது மக்களின் வாக்குரிமையை பறிக்கும் பாரிய ஜனநாயக விரோதச் செயல்பாடாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

**பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**



பாராளுமன்றத் தேர்தல் முறையை மாற்றுவதற்காக அரசாங்கம் யோசனைகளை முன்வைத்துள்ளது.

ஆனால், உள்ளூராட்சிமன்றத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல் மற்றும் ஏனைய தேர்தல்களை பிற்போடும் அணுகுமுறையையே ஜனாதிபதி பின்பற்றி வருகிறார்.

தேர்தல்களை பிற்போடுவதன் ஊடாக எமது நாட்டு மக்களின் வாக்குரிமைக்கு பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர். மக்களின் மனித உரிமைகளை மீறுகின்றனர்.

மக்களின் ஆணைக்கு இடங்கொடுத்துவிட்டு தேர்தல்முறைகளை மாற்றுவோம். மக்கள் தமது ஆணையை பயன்படுத்திய பின்னர் தேர்தல்முறை மறுசீரமைப்பு உள்ளிட்ட ஏனைய விடயங்கள் குறித்து பேசுவோம்.

தேர்தலை பிற்போட பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் கடும் முயற்சிகள் இடம்பெறுகின்றன.

தேர்தல்முறை மாற்றம் என்ற போர்வையில் மக்களின் வாக்குரிமையை பறிக்க பார்க்கின்றனர்.

ஒத்திவைக்கப்பட்டுள்ள தேர்தல்களை நடத்திவிட்டு தேர்தல்முறையை மறுசீரமைப்போம். உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்த பாரியளவில் நிதியை அரசாங்கம் செலவழித்துள்ளது. அதற்கு பொறுப்புக்கூறுவது யார்?

மக்களின் உரிமைகளை நாசமாகும் இந்த செயல்பாட்டை உடனடியாக நிறுத்த வேண்டும். இதற்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒருபோதும் அனுமதியளிக்காது-என்றார். (அ)

# வீரியமடையும் கண் நோய்!

கொழும்பு, ஒக். 19

பாடசாலை மாணவர்களிடையே தற்போது பரவிவரும் கண் நோய் வீரியமடைந்து வருவதாக குழந்தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

கண்நோய்க்குள்ளான மாணவர்களை பாடசாலைக்கு அனுப்புவதை தவிர்த்துக்கொள்ளுமாறு அவர் பெற்றோரை அறிவுறுத்தியுள்ளார்.

இதன் மூலம் கண்நோயை கட்டுப்படுத்த முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கண்கள் சிவத்தல், கண்களில் இருந்து தொடர்ந்தும் கண்ணீர் வெளியேறுதல், கண்களில் அரிப்பு ஏற்படுதல் காய்ச்சல் மற்றும் தலைவலி போன்றவை கண் நோய்க்கான அறிகுறிகளாக காணப்படுவதாக குழந்தைகள் நல மருத்துவர் தீபால் பெரேரா கூறினார். (அ)

# கந்தளாய் சூரிய ஏரியின் வான்கதவு உடைந்தது

கொழும்பு, ஒக். 19

சீரற்ற காலநிலையால் கந்தளாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட சூரியபுர பகுதியிலுள்ள சூரிய ஏரியில் இருந்து காந்தி ஏரிக்கு நீர்வழங்கும் வான் கதவு உடைந்துள்ளதாக நீர்ப்பாசனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.



இதனால் குறித்த பிரதேசத்தில் உள்ள பல வீடுகள் மற்றும் வீதிகள் நீரில் மூழ்கியுள்ளன.

ஏரியிலிருந்து பாயும் நீரை கட்டுப்படுத்தவும், வீடுகளிலும் வீதிகளிலும் வெள்ள நீர் தேங்குவதைத் தடுக்கவும் பாதுகாப்புப் படையினர் மற்றும் கிராம மக்கள் இணைந்து மணல் மூடைகளை அடுக்கி வருகின்றனர்.

கந்தளாய் நீர்ப்பாசன பொறியியலாளர் இது குறித்து கூறுகையில்-

வான் கதவு பொருத்தப்பட்டிருக்கும் இடத்தில் காட்டு யானைகள் வழமையாக நடமாடுவதாலும் தற்போதைய சீரற்ற காலநிலை காரணமாகவும் இந்த வான் கதவு உடைந்திருக்கக்கூடும்-என்றார்.



# பாகிஸ்தான் பிரதமரை சீனாவில் சந்தித்து பேசிய ஜனாதிபதி ரணில்

பீஜிங், ஒக். 19

சீனாவில் நடைபெறும் சர்வதேச மாநாட்டில் பங்கேற்பதற்காக சீனா சென்றுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாகிஸ்தான் பிரதமர் அன்வர் - உல் - ஹக் ககாரை சந்தித்துள்ளார்.

இன, மத மற்றும் வர்க்க வேறுபாட்டு பிரச்சினைகளுடன் ஒவ்வொருக்கும் இடையிலான வெறுப்புகள், குரோதங்களை தவிர்த்து மனிதாபிமானம் நிறைந்த சமுதாயத்தை கட்டியெழுப்பும் சவாலுக்கு முழு உலகும் முகம்கொடுத்துள்ளமை தொடர்பில் இருநாட்டு தலைவர்களும் கலந்தாலோசித்தனர்.

இதன்போது, பாகிஸ்தான் மற்றும் இலங்கை முகம்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடி நிலையிலிருந்து மீண்டு வருவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவும் பாகிஸ்தான் பிரதமரும் நீண்ட கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர்.

காசா எல்லைப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள மோதல்கள் தொடர்பில் இருநாட்டு தலைவர்களும் கருத்துக்களை பரிமாறிக்கொண்டதோடு, அது தொடர்பில் அறிக்கையொன்றை வெளியிடவும் இரு தலைவர்களும் இணக்கம் வெளியிட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# முல்லை நீதிபதி சரவணராஜா குறித்து நீதிச்சேவை ஆணைக்குழு விசாரணை



கொழும்பு, ஒக். 19

மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதாக குற்றச்சாட்டுகளை முன்வைத்த நீதிபதி ரி. சரவணராஜா குறித்து நீதிச்சேவை ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று விசேட அறிவிப்பொன்றை வெளியிட்ட நீதி அமைச்சர், தனக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக பொய்யான குற்றச்சாட்டை முன்வைத்த முல்லைத்தீவு மாவட்ட முன்னாள் நீதிபதி ரி.சரவணராஜாவிடம் நீதிச்சேவை ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்து வருகிறது.

அவரது குற்றச்சாட்டுகளுக்கு பின்னர் நீதி சேவை ஆணைக்குழுவின் அதிகாரிகள் முல்லைத்தீவு மற்றும் கொக்குத்தொடுவாயில் பகுதிகளுக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

நீதிச் சேவை ஆணைக்குழுவின் செயலகம், செயலாளர், அதிகாரிகள் மற்றும் அவருடன் அருகில் பணியாற்றிய எவருக்கும் தமக்கு மரண அச்சுறுத்தல்கள் ஏற்பட்டுள்ளதாக நீதிபதி எதனையும் தெரிவித்திருக்கவில்லை.

சட்டமா அதிபர் இவருக்கு எவ்வித அழுத்தங்களை கொடுக்கவில்லை என்பதை பொறுப்புடன் கூறுகிறோம்.

தமிழ்நாட்டில் உள்ள ஒரு நோயாளியை பார்வையிடச் செல்ல நீதிபதி சரவணராஜா விடுமுறை கோரிக்கை கடிதத்தையும் வழங்கியுள்ளார். ஆகவே, அவர் விடுமுறையின் போர்வையிலேயே சென்றுள்ளார்.

அவரது இராஜினாமா கடிதத்தை நீதிசேவை ஆணைக்குழு இன்னமும் ஏற்றுக்கொள்ளவில்லை. விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன-என்றார். (அ)

# இலங்கையின் நகர்ப்புற மக்கள் தொகை சடுதியாக அதிகரிப்பு

கொழும்பு, ஒக். 19

இலங்கையின் நகர்ப்புற மக்கள் தொகை 44.57 வீதமாக அதிகரித்துள்ளதாக தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான அறிக்கையை தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் காமினி ஹேவகே, அமைச்சர் பிரசன்ன ரணதுங்க விடம் பாராளுமன்ற வளாகத்தில் வைத்து கையளித்துள்ளார்.

நகர் மற்றும் கிராம திட்டமிடல் சட்டத்தின்படி தேசிய பௌதீக திட்டமிடல் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இந்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளது.

இலங்கையின் நகரமயமாக்கல் தொடர்பான கடைசி கணக்கெடுப்பு 2012 இல் நடத்தப்பட்டது. மக்கள் தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பின்படி, இலங்கையின் நகரமயமாக்கல் 18.2 வீதமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. (அ)

# நிறைவேற்று அதிகாரத்தை நீக்க முழுமையான ஆதரவு

## இலங்கைத் தமிழரசுக் கட்சி அறிவிப்பு

கொழும்பு, ஒக். 19

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்பதற்கு முயற்சி எடுக்கப்படுமானால் அதற்கு நாம் முழுமையாக ஆதரவு வழங்குவோம் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.**

**அவர் மேலும் தெரிவிக்கையில்-**



தான் என்ன செய்யவேண்டும் என்று தெரியாத நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தடுமாறுகின்றார். மக்களின் ஆணையை இழந்த ஒரு நாடாளுமன்றத்தில் தங்கி இருக்கும் அவர் அதனால் குழப்பத்தில் மூழ்கியுள்ளார்.

இந்த பாராளுமன்றம் மக்கள் ஆணையை இழந்து விட்டது என்பது கடந்த வருடமே தெட்டத் தெளிவாகியுள்ளது. இல்லையேல் அப்போது பிரதமர் இராஜினாமா செய்ய வேண்டி வந்திருக்காது. நிதி அமைச்சரும் பதவியை விட்டு விலக வேண்டி நேர்ந்திருக்காது.

ஜனாதிபதி நாட்டை விட்டு வெளியேறி பதவி விலக வேண்டி வந்திராது. ஆகவே, அவர்கள் மக்கள் ஆணையை இழந்து விட்டார்கள் என்பது தெட்டத் தெளிவானது.

பாராளுமன்றத்தில் அவர்களுக்கு உள்ள பெரும்பான்மை போலியானது. அந்தப் போலியான பெரும்பான்மையில் தங்கித்தான் இந்த பாராளுமன்றம் இயங்குகின்றது. இந்த ஜனாதிபதியையும் அதுவே தேர்வு செய்தது.

அதனால் அத்தரப்புகள் இரண்டும் ஒருவரில் ஒருவர் தங்கி உள்ளார்கள். அந்த பாராளுமன்றத்தைக் கலைக்காமல் அவர்களைப் பதவியில் தொடர செய்யவேண்டிய அவசியம் இந்த ஜனாதிபதிக்கு இருக்கின்றது.

ஆனால், இந்த விளையாட்டு மக்களின் விருப்புக்கு ஆணைக்கு மாறானது. அது அப்பட்டமான உண்மை. இந்த நிலைமை தொடர்வதை மக்கள் விரும்பவில்லை என்பதும் வெளிப்படையானது. ஆனால் ஆட்சியாளர்களின் நிலைமை இந்தப் போக்கை நீடிப்பது என்பதுதான்.

மக்களின் ஆணை இல்லாமல் தாங்கள் அதிகாரத்தில் உள்ளார்கள். அதை எப்படி நீடிப்பது என்பதுதான் அவர்களின் சிரத்தை.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் வந்தது. அதற்கான நிதியை விடாமல் தடுத்தார்கள். அதனால் தேர்தல் நடைபெறவில்லை. மக்களை சந்திக்க இடமளிக்கவில்லை.

அடுத்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் வருகின்றது. அதற்கு அடுத்த வருடம் பாராளுமன்றத் தேர்தல் நடத்தப்பட வேண்டும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்து, பாராளுமன்றத்தின் மூலம் அதிகாரத்தில் தொடரும் அவர்களின் திட்டம் பற்றி பேசப்படுகின்றது.

எனக்கு அது குறித்து விவரம் ஏதும் தெரியாது. ஆனால், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிக்கும் நகர்வு முன்னெடுக்கப்பட்டால் நாம் எப்போதும் அதை ஆதரிக்கவேண்டும்.

அது, குறுகிய நோக்கத்துக்காகவோ அல்லது சுயநலன்களுக்காகவோ அல்லது வஞ்சக எண்ணத்தோடோ முன்னெடுக்கப்பட்டாலும் கூட அந்த முறைமையை ஒழிப்பதற்கு ஏதேனும் முயற்சி எடுக்கப்பட்டால் அந்த எதேச்சதிகார முறைமையை நீக்குவதற்கு நாம் ஒத்துழைப்பு நல்கவேண்டும்.

ஏனென்றால், வேறு வழிமுறைகளில் இந்த முறைமையை ஒழிக்கச் சந்தர்ப்பம் கிடைக்காது. இத்தகைய குழப்பமான நோக்கங்களுக்கு மத்தியில்தான் இந்த முறைமையை ஒழிக்க வாய்ப்பு கிட்டும் என்றால் நாம் அதனைப் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

இந்த முறைமை எம்மை விட்டுத் தொலைவதற்கு இதைத் தவிர வேறு வாய்ப்பு கிடைக்காது. கிடைத்தால் நாம் தந்திரோபாயமாக அதைப் பயன்படுத்த வேண்டும்.

ஆனால், அப்படி அந்த ஆட்சி முறைமையை ஒழிப்பதற்காக இடைக்கால ஏற்பாடாக இந்த ஜனாதிபதியின் பதவிக் காலத்தை சற்று காலம் நீடிக்க வேண்டும் என்ற திட்டத்துக்கு நாம் இணங்க முடியாது. மக்களின் வாக்களிக்கும் உரிமையை மறுத்துக் காலம் கடத்தும் அதிகாரத்தில் நீடிக்கும் திட்டத்துக்கு நாம் ஒத்துவர முடியாது-என்றார்.

(அ)

# சிறிலங்கன் எயார்லைன்ஸ் சேவையை நிறுத்தவேண்டிய நிலைமை ஏற்படும்!

## கூறுகிறார் நிமல் சிறிபால டி சில்வா

கொழும்பு, ஒக். 19

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்திற்கு வர்த்தக பங்காளியை கண்டுபிடிக்க முடியாவில்லையெனில் விமான சேவையை நிறுத்த வேண்டிய நிலை ஏற்படும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனம் தொடர்ந்து நட்டத்தை சந்திக்க முடியாது.

எனவே நிறுவனத்தின் 49 வீதமான பங்குகளை வேறு தரப்பினருக்கு மாற்றி கூட்டு முயற்சியாக நடத்த உத்தேசித்துள்ளோம்.

நாங்கள் 1.2 பில்லியன் அமெரிக்க டொலர் கடனில் இருக்கிறோம்-என்றார். (அ)

# இஸ்ரேல்-பலஸ்தீனப் போர் பாராளுமன்றத்தில் விவாதம்

## சபாநாயகர் அறிவிப்பு



கொழும்பு, ஒக். 19

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இயக்கத்துக்கு இடையில் இடம்பெற்றுவரும் போர் தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படும் என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே இந்த விவகாரம் தொடர்பில் விவாதம் நடத்தப்படுமென சபாநாயகர் பதிலளித்தார்.

பாராளுமன்றத்தில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர்,

இஸ்ரேல்-பலஸ்தீனத்துக்கு இடையிலான போரில் தீவிரவாதிகளாலும் மக்கள் கொல்லப்படுவதுடன், அரச பயங்கரவாதத்தாலும் மக்கள் கொல்லப்படுகின்றனர். இதனால் எதிர்வரும் வெள்ளிக்கிழமை இந்த விவகாரம் தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தவேண்டும் கோரிக்கை விடுத்தார்.

அதேபோன்று பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர், பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில ஆகியோரும் இந்த விவகாரம் தொடர்பில் பாராளுமன்றில் விவாதம் நடத்தப்படவேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர்.

விவாதம் நடத்துவதன் ஊடாக போர் காரணமாக இலங்கைக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைக்க அரசாங்கம் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து சபைக்கு அறிவிக்க முடியும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

பலரது கோரிக்கையின் பிரகாரம் சபையில் இது குறித்து விவாதம் நடத்தப்படுமென சபாநாயகர் அறிவித்தார்.

(அ)

## *சனல் 4 ஆவணப்பட விவகாரம்*

# தெரிவுக் குழுவின் விசாரணைகளில் அரசாங்கம் ஒருபோதும் தலையிடாது

கொழும்பு, ஒக். 19

சனல் 4 ஆவணப்படம் குறித்த விசாரணைகளுக்கான நியமிக்கப்படும் பாராளுமன்ற தெரிவுக்குழுவின் விசாரணைகளில் அரசாங்கம் தலையிடாது என ஆளும் கட்சி கொறடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமனம் தொடர்பில் எதிர்க்கட்சிகள் முன்வைத்துள்ள குற்றச்சாட்டுகளுக்கு பதில் வழங்கும் போதே அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இவ்வாறு கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஜனாதிபதிக்கு கர்தினால் அனுப்பிய கடிதத்தை சமர்ப்பித்ததுடன், ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான பாராளுமன்றத் தெரிவுக்குழுவை ஏற்றுக்கொள்ள முடியாது என வலியுறுத்தினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ உரையாற்றுகையில்-

தேசிய கத்தோலிக்க குழு ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதைப் பற்றி உங்களுக்குத் தெரிவிக்க வேண்டியது என் பொறுப்பு. விசாரணை தொண்ணூற்றொன்பது சதவீதம் முடிந்துவிட்டது என்ற கதையை கத்தோலிக்க குழு நிராகரிக்கிறது.

இந்த பாராளுமன்ற தெரிவுக் குழு மீது நம்பிக்கை இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தேர்வுக் குழுவை ஏற்க, தலைவர் பதவியை பரிந்துரை செய்வதை எங்களிடம் விட்டு விடுங்கள்.

முன்மொழியப்பட்ட குழுவின் அமைப்பை சமநிலைப்படுத்துங்கள். இல்லையெனில் எங்களால் இதில் பங்கேற்க முடியாது. கத்தோலிக்க ஆயர் கர்தினாலின் முடிவின் அடிப்படையில் இதில் பங்கேற்பதா வேண்டாமா என்ற முடிவை எடுப்போம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

அதற்கு பதிலளித்த ஆளும் கட்சி கொறடா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க,

தெரிவுக் குழு மீது எதிர்க்கட்சிகள் தங்கள் கருத்துக்களை முன்வைத்தன. மற்ற சோதனைகளுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் இதைச் செய்ய வேண்டும் என்று எங்கும் கூறப்படவில்லை. அதிமேதகு கர்தினால் அவர்கள் வழங்கிய கடிதத்தை எதிர்க்கட்சித் தலைவர் ஜனாதிபதியிடம் கையளித்தார்.

உண்மைகள் காரணமாக இந்த பாராளுமன்றத்தின் தெரிவுக்குழுவோ அல்லது உறுப்பினர்களோ அந்த விசாரணையை மேற்கொள்ள முடியாது. பாதுகாப்புப் படையினரும் அது தொடர்பான நிறுவனங்களும் இதனை நியமிப்பது அதற்குத் தடையாக இருக்காது.

அன்றைய தினம் பாராளுமன்றத்தில் இது தொடர்பான விவாதம் இடம்பெற்றதாக நான் நம்புகிறேன். முதலில் நியமிக்கப்பட்ட தேர்வுக் குழுவின் வளர்ச்சி குறித்து பேசினர். அது பற்றி விவாதிக்க இந்த தேர்வுக் குழுவுக்கு வாய்ப்பு உள்ளது.

இது ஒரு தடையாகவோ அல்லது விசாரணையாகவோ இருக்க நாங்கள் விரும்பவில்லை. எனவே, நாங்கள் உங்கள் நிலைப்பாட்டில் இருந்து இதைப் பற்றி பேசுகிறோம்.

பாராளுமன்ற தெரிவுக்குழு நியமனத்தின் ஊடாக பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட உண்மைகள் மற்றும் ஆவணங்களை முன்வைக்க முடியும் என நினைக்கின்றேன்.

ஏனெனில் அந்த விவாதத்தில் சில எம்.பி.க்கள் புதிய விஷயங்களை முன்வைத்த காலங்கள் உண்டு, நமக்குத் தெரியாத விஷயங்கள், ஒருவேளை அவர்களின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளக் கூடும்.

எனவே, தேர்வுக் குழு நியமனம் மூலம் மற்ற விசாரணைகள் தடைப்படாது. ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தை எதிர்க்கட்சித் தலைவர் சமர்ப்பித்தார்.

அதுபற்றி நாட்டுக்கு வந்த பிறகு பதில் அளிப்பார். ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் எமது அனைவரினதும் நிலைப்பாடு இதனை செய்தவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதேயாகும். அந்தச் சோதனைகளுக்கு இது ஒரு தடையாக நான் நினைக்கவில்லை-என்றார். (அ)

# கண்புரை நோயாளர்கள் 120 பேருக்கு அம்பாறையில் இலவச சத்திரசிகிச்சை!

**காரைதீவு, ஒக். 19**

**கடந்த நான்கு வருடங்களாக சத்திரசிகிச்சைக்காக காத்திருந்த கண்புரை 120 நோயாளிகளுக்கு கண்புரை சத்திரசிகிச்சை இலவசமாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

**லண்டன் புனர் வாழ்வும் புதுவாழ்வும் என்ற அமைப்பு இலவசமாக அம்பாறை பொது வைத்தியசாலையில் இந்த சத்திர சிகிச்சைகளை முற்றிலும் இலவசமாக நடத்தி வைத்தனர்.**



புனர்வாழ்வும் புது வாழ்வும் அமைப்பின் தலைவர் பொறியியலாளர் கலாநிதி வேலாயுதம் சர்வேஸ்வரன் மற்றும் இலங்கைக்கான தலைவர் பொறியியலாளர் ஹென்றி அமல்ராஜ் ஆகியோர் முன்னிலையில் நின்று செயல்பட்டனர்.

கொழும்பு தேசிய வைத்தியசாலை கண் சத்திர சிகிச்சை நிபுணர் டாக்டர் ஜயசிரி டயஸ் தலைமையிலான குழுவினர் இந்த சத்திர சிகிச்சைகளை மேற்கொண்டார்கள்.

இந்த மனிதாபிமான மணிக்கு மலேசியா ஆனந்தா பவுண்டேஷன் மற்றும் அலாகா பவுண்டேஷன் அனுசரணை வழங்கி இருந்தார்கள்.

120 பேருக்கு இந்த கண்புரை நோய் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டதற்கு அந்த மக்கள் அமைப்பினருக்கு நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர். (அ)

# காட்டு யானைகள் தொல்லையால் தம்பலகாமம் கிராம மக்கள் பாதிப்பு



*திருமலை, ஒக். 19*

திருகோணமலை -தம்பலகாமம் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பத்தினிபுரம் கிராமத்துக்குள் இரவு புகுந்த காட்டு யானைகள் தென்னை, வாழை, வீட்டுத் தோட்டப் பயிர்களையும் பாதுகாப்பு வேலிகளையும் துவம்சம் செய்துள்ளதாக அக் கிராம மக்கள் தெரிவித்தனர்.

இரவு கிராமத்துக்குள் புகுந்த காட்டு யானை, தொடர்ச்சியாக தமது வாழ்வாதாரப் பயிர்களை நாசம் செய்ததாகவும் மக்கள் கூறினர்.

இதேவேளை, தமது பிள்ளைகள் மாலை நேர வகுப்புகளுக்கு சென்று வரும்போது வீதிகளில் யானை நின்று அச்சத்தை ஏற்படுத்துவதாகவும் மக்கள் தெரிவித்தனர்.

காட்டு யானைகள் தொடர்ச்சியாக வருவதனால் இரவு நேரங்களில் தூங்குவது, பிள்ளைகளை வைத்துக் கொள்வது, வெளியில் நடமாடுவது பெரும் கஷ்டம் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர். (அ)

# பழமைவாய்ந்த மரம் வெட்டி அகற்றப்பட்டது





*மட்டக்களப்பு, ஒக். 19*

நாட்டில் அண்மைக்காலமாக நிலவிவரும் காலநிலை மாற்றத்தில் பல வீதியோர மரங்கள் முறிந்து விழுந்ததால் பல உயிர்களும் காவு கொள்ளப்பட்டுள்ளது.

இதனை கருத்தில் கொண்டு அரசாங்கம் வீதியோரங்களில் முறிந்து விழும் அபாய நிலையில் இருக்கும் பாரிய மரங்களை அகற்றுவதற்கான பணிப்புரையை தேசிய ரீதியில் விடுத்துள்ள நிலையில் மட்டக்களப்பு மாவட்டத்திலும் அவ்வாறான ஆபத்தை விளைவிக்கும் வகையில் காணப்படும் பாரிய மரங்களை அகற்றும் நடவடிக்கைகள் மாவட்டத்தில் முன்னெடுப்பதற்கான அறிவுறுத்தல்கள் உரிய திணைக்களங்களுக்கு விடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள ஜாமியுஸ் ஸலாம் ஜும்மா பள்ளிவாசல் முன்பாக இருந்த 300 நூறு வருடங்கள் பழமை வாய்ந்த வாகை மரம் வெட்டி அகற்றப்பட்டுள்ளது.

# 149ஆவது உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு கல்முனை அஞ்சல் அலுவலகத்தில் குருதி தானம்!

*அம்பாறை, ஒக். 19*

'149 ஆவது உலக அஞ்சல் தினத்தை முன்னிட்டு உதிரம் கொடுத்து உயிர் காப்போம்' எனும் தொனிப்பொருளில் கல்முனை அஞ்சல் அலுவலகத்தில் இரத்ததான முகாம் கல்முனை பிரதம அஞ்சல் அதிபர் யூ.எல்.எம். பைஸர் தலைமையில் நேற்று முன்தினம் காலை நடைபெற்றது.

இதன்போது கிழக்கு மாகாண பிரதி அஞ்சல் மா அதிபதி காமினி விமலசூரிய, அம்பாறை -அக்கரைப்பற்று பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் கே.பி.எஸ். பிரியந்த உட்பட பிரதேச தபால் அதிபர்கள் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



குறித்த இரத்ததான முகாமில் அதிகமானோர் ஆர்வத்துடன் கலந்து கொண்டதுடன் கல்முனை ஆதார வைத்தியசாலையின் இரத்த வங்கியின் பணிப்பாளர் வைத்தியர் கே.ஹரிபிரசாத் இரத்ததானம் தொடர்பில் பல்வேறு விளக்கங்களை வழங்கினார். (அ)

# கல்முனையில் மனித பாவனைக்கு உதவாத ஒரு தொகை கொத்தமல்லி அழிக்கப்பட்டது

*அம்பாறை, ஒக். 19*

கல்முனையில் அண்மையில் பறிமுதல் செய்யப்பட்ட மனித பாவனைக்கு உதவாத ஒரு தொகை கொத்தமல்லி நேற்று அழிக்கப்பட்டது.

கல்முனை நீதிவான் நீதிமன்றினால் பிறப்பிக்கப்பட்ட கட்டளைக்கமைய செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது.

கடந்த செப்ரெம்பர் மாதம் அம்பாறை மாவட்ட நுகர்வோர் அதிகார சபையினால் கல்முனை பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது மனித பாவனைக்கு உதவாத மல்லியை பதுக்கி வைத்திருந்த வர்த்தக களஞ்சியசாலைகள் சோதனை செய்யப்பட்டு கல்முனை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

கல்முனை நீதிவான் நீதிமன்ற கட்டளைக்கமைய சான்றுபொருட்களாக நீதிமன்றில்



ஒப்படைக்கப்பட்டிருந்த 90 மூடைகளில் இருந்த சுமார் 2250 கிலோ கிராம் எடையுடைய கொத்தமல்லி அழிக்கப்பட்டது.

இதன் போது நீதிமன்ற அதிகாரிகள், அம்பாறை மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் புலன் விசாரணை உத்தியோகத்தர்கள், பிராந்திய பொது சுகாதார பரிசோதகர்கள், உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் பிரசன்னமாகியிருந்தனர். (அ)

# காஸா மருத்துவமனையை தரைமட்டமாக்கிய இஸ்ரேல்!

## 500 பேர் உயிரிழப்பு!!

ஜெருசலேம், ஒக். 19

காஸா பகுதியில் உள்ள அல்-அஹ்லி பாப்டிஸ்ட் மருத்துவமனை மீது இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் குறைந்தது 500 பேர் உயிரிழந்துள்ளனர் என்று முற்றுகையிடப்பட்ட பகுதியில் உள்ள சுகாதார அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

காஸா நகரில் உள்ள அல்-அஹ்லி மருத்துவமனை மீதான தாக்குதல், 2008 க்குப் பிறகு நடந்த ஐந்து போர்களில் இஸ்ரேலிய வான்வழித் தாக்குதலின் மிக மோசமான தாக்குதலாகும்.



அல்-அஹ்லி மருத்துவமனையின் புகைப்படங்கள், மருத்துவமனை அரங்குகள், உடைந்த கண்ணாடி மற்றும் உடல் பாகங்கள் பகுதி முழுவதும் சிதறிக் கிடப்பதைக் காட்டியது.

காஸா நகரத்தில் உள்ள பல மருத்துவமனைகள் நூற்றுக்கணக்கான மக்களுக்கு புகலிடங்களாக மாறியுள்ளன. இஸ்ரேல் நகரம் மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் அனைவரையும் தெற்கு காசா பகுதிக்கு காலி செய்ய உத்தர விட்டதை அடுத்து, மருத்துவமனைக்குள் தஞ்சமடைந்தால் குண்டுவீச்சிலிருந்து தப்பிக்க முடியும் என்று காஸாவிலுள்ள அப்பாவி மக்கள் நம்புகிறார்கள்.

காஸாவில் உள்ள மருத்துவமனையில் மரணங்கள் இஸ்ரேலிய விமானத் தாக்குதலால் ஏற்பட்டதாக பலஸ்தீனிய சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர். ஆனால் இஸ்ரேலிய இராணுவம் பலஸ்தீனிய போராளி குழுவின் ரொக்கெட் ஏவுதல் தோல்வியடைந்ததாக குற்றம் சாட்டியது.

"இஸ்ரேல் இராணுவ செயல்பாட்டு அமைப்புகளின் பகுப்பாய்வு, காசாவில் பயங்கரவாதிகளால் சரமாரியாக ரொக்கெட்டுகள் வீசப்பட்டதைக் கண்டறிந்தன. அந்த தாக்குதல் நடத்தப்பட்ட நேரத்தில் காசாவில் உள்ள அல் அஹ்லி மருத்துவமனைக்கு அருகாமையில் சென்றது" என்று இராணுவ செய்தித் தொடர்பாளர் கூறினார்.

"காஸாவில் உள்ள மருத்துவமனையைத் தாக்கிய ரொக்கெட் ஏவுதல் தோல்வியடைந்ததற்கு இஸ்லாமிய ஜிஹாத் தான் காரணம் என்பதை எங்கள் கைகளில் உள்ள பல ஆதாரங்களில் இருந்து உளவுத்துறை சுட்டிக்காட்டுகிறது." என்றார் அவர்.

எனினும், நீண்டகாலமாக இஸ்ரேல் இந்தவிதமாக பொய்களை கூறுவது வழக்கம். காஸாவில் முன்னரும் பல தாக்குதல்களை நடத்தி விட்டு, ஹமாஸின் ரொக்கட் தோல்வியடைந்து தமது பகுதிக்குள்ளேயே விழுந்து வெடித்து விட்டது என கூறுவது வழக்கம்.

பலஸ்தீனிய இஸ்லாமிய ஜிஹாத் குழு, இஸ்ரேல் இராணுவத்தின் குற்றச்சாட்டுகளை பொய் என்று விவரித்தது.

"சியோனிச எதிரி, காஸாவில் உள்ள பாப்டிஸ்ட் அரேபிய தேசிய மருத்துவமனை மீது குண்டுவீசி, தனது வழக்கமான பொய்களின் மூலம், பலஸ்தீனத்தில் உள்ள இஸ்லாமிய ஜிஹாத் இயக்கத்தின் மீது குற்றம் சாட்டுவதன் மூலம், அவர்கள் செய்த கொடூரமான படுகொலைக்கான பொறுப்பிலிருந்து தப்பிக்க கடுமையாக முயற்சி செய்கிறது. எனவே எதிரிகள் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் தவறானவை மற்றும் ஆதாரமற்றவை என்பதை நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்." என பலஸ்தீனிய இஸ்லாமிய ஜிஹாத் குழு குறிப்பிட்டது.

பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ் பலஸ்தீனிய இஸ்லாமிய ஜிஹாத் குழுவில் மருத்துவமனை மீது வான்வழித் தாக்குதலைத் தொடர்ந்து மூன்று நாட்கள் துக்கம் அறிவித்தார்.

"நடப்பது இனப்படுகொலை. இந்தப் படுகொலையைத் தடுத்து நிறுத்த சர்வதேச சமூகம் உடனடியாகத் தலையிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம். மௌனத்தை இனி ஏற்றுக்கொள்ள முடியாது" என பலஸ்தீன விடுதலை அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தாக்குதலுக்கு பதிலளிக்கும் வகையில் கூறப்பட்டுள்ளது.

இஸ்ரேலின் இந்த படுகொலையை தொடர்ந்து, நான் திகிலடைவதாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் தெரிவித்துள்ளார்.

"மருத்துவமனைகள் மற்றும் மருத்துவ பணியாளர்கள் சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படுகிறார்கள்," என்று குட்டெரெஸ் கூறினார். (அ)



# கடும் எரிபொருள் நெருக்கடி!

## பாகிஸ்தான் விமான சேவையின் 50 விமானங்கள் இரத்து

இஸ்லாமாபாத், ஒக். 19

பாகிஸ்தான் தேசிய விமான சேவை கடந்த செவ்வாய்க்கிழமை முதல் 50 இற்கும் மேற்பட்ட விமானங்களை இரத்து செய்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

நிலுவைத் தொகையை செலுத்தாததால் நாளாந்த எரிபொருள் விநியோகத்தில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதைத் தொடர்ந்து விமானங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை குறைந்தது 24 உள்நாட்டு மற்றும் சர்வதேச விமானங்கள் இரத்து செய்யப்பட்டதுடன், 12 பிற விமானங்கள் தாமதமாகியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதன்கிழமை திட்டமிடப்பட்ட 16 சர்வதேச மற்றும் 13 உள்நாட்டு விமானங்கள் உட்பட இரண்டு டசின் விமானங்களை இரத்துச் செய்துள்ளது டன் பலவற்றை தாமதப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் தேசிய விமான சேவை விமானங்களுக்கான குறைந்த தினசரி எரிபொருள் விநியோகம் மற்றும் பிற செயல்பாட்டுக் காரணங்களால் விமானங்கள் இரத்து செய்யப்பட்டன என்று நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் கூறியதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதே காரணத்திற்காக சில விமானங்கள் புறப்படும் நேரத்தை மாற்றியமைக்க வேண்டியிருந்தது என்று பாகிஸ்தான் தேசிய விமான சேவை தெரிவித்துள்ளது.

உள்நாட்டுச் செயல்பாடுகளைத் தவிர, இப்போது இரத்து செய்யப்பட்ட சர்வதேசப் புறப்பாடுகளில் டுபாய், மஸ்கட், ஷார்ஜா, அபுதாபி மற்றும் குவைத் ஆகிய நாடுகளுக்கான விமானங்களும் அடங்கும்.

விமானங்கள் இரத்து செய்யப்பட்டதால் பாதிக்கப்பட்ட பயணிகள் மாற்று விமானங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்று தேசிய விமான நிறுவனம் தெரிவித்துள்ளது.

விமான நிலையத்திற்குச் செல்வதற்கு முன் பயணிகளை அதன் அழைப்பு மையம், அலுவலகங்கள் அல்லது பயண முகவர்களைத் தொடர்பு கொள்ளுமாறும் பாக்கிஸ்தான் தேசிய விமான சேவை கேட்டுக் கொண்டுள்ளது.

பல விமானங்கள் இரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து, பாகிஸ்தான் ஸ்டேட் ஒயில் நிறுவனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி மீண்டும் விமானச் செயல்பாடுகளை ஒழுங்குபடுத்துவதாக விமான நிறுவனத்தின் செய்தி தொடர்பாளர் கூறியுள்ளார்.

நீண்டகாலமாக நிதி நெருக்கடியை சந்தித்து வரும் பாகிஸ்தான் தேசிய விமான சேவையை தனியார் மயமாக்கும் செயல்முறையை விரைவுபடுத்துமாறு காபந்து பிரதமர் அன்வாருல் ஹக் கக்கர் ஏற்கனவே அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

# அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுடனான உச்சிமாநாட்டை இரத்து செய்தார் அப்பாஸ்!

அம்மான், ஒக். 19

ஜோர்தான் மன்னர் அப்துல்லா, எகிப்து ஜனாதிபதி அப்தெல் பத்தா சிஸ்ஸி மற்றும் பலஸ்தீன அதிகாரசபையின் தலைவர் மஹ்மூத் அப்பாஸ் ஆகியோருடன் அம்மானில் நேற்று நடைபெறவிருந்த அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் உச்சி மாநாடு ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக ஜோர்தானின் வெளியுறவு அமைச்சர் அய்மன் சஃபாடி அறிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் மாலை, பலஸ்தீனிய மூத்த அதிகாரி ஒருவர், அப்பாஸ் கூட்டத்தில் பங்கேற்பதை ரத்து செய்ததாக தெரிவித்தார்.

பைடனுடன் சமீபத்திய இஸ்ரேல்-ஹமாஸ் போரைப் பற்றி விவாதிக்க அமைக்கப்பட்டிருந்த உச்சிமாநாட்டில் அப்பாஸ், மன்னர் இரண்டாம் அப்துல்லா மற்றும் சிஸ்ஸியுடன் சேர திட்டமிடப்பட்டிருந்தது.

ஆனால் காஸாவில் உள்ள ஒரு மருத்துவமனையில் இஸ்ரேல் குண்டு வீசி தாக்குதல் நடத்தியதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் அப்பாஸ் இந்த உச்சிமாநாட்டில் கலந்து கொள்ளும் முடிவை வாபஸ் பெறுவதாக மூத்த அதிகாரி கூறினார்.

ஜோர்தானின் வெளியுறவு அமைச்சர் அய்மன் சஃபாடி, பைடனுடன் ஜோர்தானில் திட்டமிடப்பட்ட உச்சிமாநாட்டை ஒத்திவைப்பது "அனைவரின் நலன்களுக்கும்" என்று கூறினார்.

"போர் அதிக துன்பம், அதிக மரணம், அதிக அழிவை தவிர வேறு எதையும் கொண்டு வரப்போவதில்லை. இது இஸ்ரேலியர்களுக்கோ அல்லது பலஸ்தீனியர்களுக்கோ பாதுகாப்பை உருவாக்காது. இது முழு பிராந்தியத்தின் பாதுகாப்பையும் அச்சுறுத்துகிறது. அது விரிவடைந்து பரவும் உண்மையான அச்சுறுத்தல். இந்தப் போர் ஏற்படுத்தும் தாக்கத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும், உடனடியாக பாதிக்கப்பட்ட காசா மக்கள் மீது மட்டுமல்ல. இந்தப் போர் உலகெங்கிலும் உள்ள அரேபிய, முஸ்லீம், கிறிஸ்தவ மக்களின் கருத்தை - மனிதக் கருத்தை, பொதுக் கருத்தை - தூண்டுகிறது என்பதை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும்.



எங்கள் மக்கள் இப்போது தெருக்களில் இருக்கிறார்கள். சுமார் 18,000 ஜோர்தானியர்கள் வீதியில் இறங்கி பேரழிவு, காசா மக்கள் மீதான இந்த ஆக்கிரமிப்பு குறித்து தங்கள் கோபத்தை வெளிப்படுத்துகின்றனர்"-என்றார் ஜோர்தானின் வெளியுறவு அமைச்சர்.

வெள்ளை மாளிகையும் இந்த தகவலை உறுதி செய்தது.

"ஜோர்தான் மன்னர் இரண்டாம் அப்துல்லாவுடன் ஆலோசனை நடத்திய பின்னர், பலஸ்தீனிய அதிகாரசபையின் தலைவர் அப்பாஸ் அறிவித்த துக்க நாட்களில், ஜனாதிபதி பைடன் ஜோர்தானுக்கான தனது பயணத்தையும் இந்த இரு தலைவர்கள் மற்றும் எகிப்தின் ஜனாதிபதி சிசியுடனான திட்டமிடப்பட்ட சந்திப்பையும் ஒத்திவைப்பார்" என அது தெரிவித்தது. (அ)

# பலஸ்தீனப் போர் எதிர்காலத்தில் எமது நாடுகளுக்கும் வியாபிக்கும்

## எச்சரிக்கிறார் சம்பிக்க ரணவக்க

கொழும்பு, ஒக். 19

பலஸ்தீனத்தில் இரண்டாயிரம் வருடங்களாக இந்தப்பிரச்னைதான் இங்கு நிலவுகிறது. இதற்கு சர்வதேச சமூகம் உரிய தீர்வுகளை காணப்படாவிடின் எதிர்காலத்தில் இந்தப் பிரச்னை எமது நாடுகளுக்கும் வியாபிக்கும் என பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு வலியுறுத்தினார்

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இஸ்ரேல்-பலஸ்தீன போரை நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அது எதிர்வரும் நாட்களில் இலங்கையின் சமூக, பொருளாதாரம் மற்றும் பிராந்திய அரசியலில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

காஸாவுக்கான நீர் இணைப்பு, மின்சாரம், பொருட்கள் விநியோகம், தகவல் தொடர்பாடல் முதல் அனைத்தும் துண்டிக்கப்பட்டுள்ளன. இதனால் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

குழந்தைகள், பெண்கள், முதியவர்கள் என அனைவரும் பாதிக்கப்பட்டுள்ளனர். ஜெனிவா சமவாயத்தை முற்றாக மீறும் வகையில் இங்கு போர் இடம்பெறுவதுடன், போர்க்குற்றங்களும் கடுமையாக மீறப்பட்டு வருகின்றன.

மத ரீதியாக இந்த விவகாரத்தை பாராது மனிதநேயத்துடன் அணுக வேண்டும். காஸாவுக்கான நீர், மின்சாரம் மற் றும் தகவல் தொடர்பாடல் வசதியை ஏற்படுத்திக்கொடுக்க சர்வதேச சமூக மத்தியஸ்தம் வகிக்க எடுக்க வேண்டும்.



காஸாவில் வாழும் மக்கள் இஸ்ரேல் இராணுவம் மற்றும் ஹமாஸ் குழுவின் பணயக் கைதிகளாகவும் உள்ளனர். இவர்களை காப்பாற்ற சர்வதேச சமூகம் தலையீடுகளை மேற்கொள்ள வேண்டுமே தவிர போரை தூண்டிவிடக் கூடாது.

இந்த விவகாரத்தில் சுயாதீன இஸ்ரேல் மற்றும் சுயாதீன பலஸ்தீனத்தை ஏற்றுக்கொள்வது தான் இலங்கையின் கடந்தகால வெளிவிவகார கொள்கையாக இருந்தது.

பலஸ்தீன மக்கள் வரலாற்றுக்காலம் தொட்டு வாழ்கின்றனர். அவர்களது நிலத்தில் சுயாதீனமான ஆட்சியை தீர்மானித்துக்கொள்ளும் சந்தர்ப்பங்கள் உருவாக்கப்பட வேண்டும். இங்கு ஆயுதக் குழுக்களுக்கும் இராணுவக் குழுக்களுக்கும் அதிகாரங்களை வழங்க அனுமதியளிக்க கூடாது.

முழு காஸாவிலும் 5 மில்லியன் வரையான மக்கள் வாழ்கின்றனர். காஸாவுக்கு வெளியில் 6 மில்லியன் வரையான மக்கள் வாழ்கின்றனர். இவர்களுக்கு நாடொன்று அவசியமாகும். அவர்கள் தமது தாய் நாடு திரும்ப வேண்டும்.

இங்கு மதச் சுதந்திரம் பேணப்பட வேண்டும். இரண்டாயிரம் வருடங்களாக இந்தப்பிரச்னை தான் இங்கு நிலவுகிறது. இதற்கு சர்வதேச சமூகம் உரிய தீர்வுகளை காணப்படாவிடின் எதிர் காலத்தில் இந்தப்பிரச்னை எமது நாடுகளுக்கும் வியாபிக்கும் -என்றார். (அ)

# அனுமதிப்பத்திரம் இல்லாது மணல் ஏற்றிய மூவர் கைது!

கிளிநொச்சி, ஒக். 19

அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய இரண்டு டிப்பர் வாகனங்களும் ஓர் உழவு இயந்திரத்துடன் மூன்று சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்லாறு பகுதியில் அனுமதிப்பத்திரத்திற்கு முரணான வகையில் மணல் ஏற்றுவதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக வீதிச் சோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது, இரண்டு டிப்பர் வாகனங்களும், ஓர் உழவு இயந்திரமும் கைப்பற்றப்பட்டதுடன் அதனை செலுத்திய மூன்று சந்தேக நபர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் பொலிஸ் விசாரணைகளின் பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். (அ)

# மெழுகுவர்த்தியால் பறிபோன வயோதிபப் பெண்ணின் உயிர்!

கொழும்பு, ஒக். 19

அயகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உடுகல பிரதேசத்தில் வீடொன்று தீப்பிடித்ததில் வயோதிப பெண் ஒருவர் உடல் கருகி உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று முன் தினம் பதிவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

உடுகல அயகம பிரதேசத்தில் வசிக்கும் 79 வயதுடைய பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அந்த பெண் உடல் நலக்குறைவால் ஒரே இடத்தில் தங்கியிருந்ததால் இரவு நேரத்தில் அவர் தங்கியிருந்த அறையில் வெளிச்சம் இல்லாததால் பிளாஸ்ரிக் நாற்காலியில் மெழுகுவர்த்தியை பற்ற வைத்துள்ளார்.

பிளாஸ்ரிக் நாற்காலியில் தீப்பிடித்து, அவர் உறங்கிக் கொண்டிருந்த மெத்தை தீப்பற்றி எரிந்ததால் பெண் உயிரிழந்தமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அயகம பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# கொத்தமல்லி எனக் கூறி பீடி இலைகள் இறக்குமதி!

கொழும்பு, ஒக். 19

கொத்தமல்லி' எனத் தெரிவித்து சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட எட்டு கோடியே அறுபது லட்சம் ரூபா மதிப்புள்ள பீடி இலைகளை சுங்க மத்திய புலனாய்வுப் பிரிவின் அதிகாரிகள் குழுவொன்று கைப்பற்றியுள்ளது.

இந்த பீடி இலைகள் இந்தியாவின் தூத்துக்குடி துறைமுகத்திலிருந்து இரண்டு 20 அடி நீள கொள்கலன்களில் கொழும்பு துறைமுகத்துக்கு ஹோமாகம பகுதியில் வசிக்கும் ஒரு இறக்குமதியாளரால் கொண்டு வரப்பட்டது.

இந்த இரண்டு கொள்கலன்களிலும் 11,460 கிலோ எடை கொண்ட பீடி இலைகள் இருந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த பீடி இலைக்கு வரி விலக்கு அளித்திருந்தால், அரசுக்கு, ஏழு கோடியே எழுபது லட்சம் ரூபா வரி வருவாய் இழப்பு ஏற்பட்டிருக்கும் என சுங்கத்துறை செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார். (அ)

# இந்தியாவுடனான பால் உற்பத்தித்துறை ஒப்பந்தம் வெளிப்படைத்தன்மையற்றது

## சபையில் எதிர்க்கட்சித் தலைவர் குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக். 19

இந்திய - இலங்கைக்கு இடையில் செய்துக்கொள்ளப்பட்டுள்ள கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தித் துறை ஒத்துழைப்பு ஒப்பந்தம் வெளிப்படைத்தன் மையற்றதாக உள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன் தினம் கேள்வி எழுப்பும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பால் உற்பத்தித்துறையில் தன்னிறைவடைய இந்தியாவால் முடிந்துள்ளது. அது அவர்களது திறமையாகும்

இந்நிலையில், இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான கால்நடை வளர்ப்பு மற்றும் பால் உற்பத்தித் துறை ஒத்துழைப்பு ஒப்பந்தம் முதல் தடவை பேச்சுவார்த்தைகளின் போது தோல்வியடைந்திருந்தது.



ஆனால், தற்போது இந்த ஒப்பந்தம் வெற்றியளித்துள்ளதாக அரசாங்கம் கூறியுள்ளதுடன், அதற்கான ஒப்பந்தமும் கைச்சாத்திடப்பட்டுள்ளது. அன்று தோல்வியடைந்த ஒப்பந்தம் இன்று வெற்றிபெற என்ன காரணிகள் ஏதுவாக இருந்தது என்பதை அரசாங்கம் தெளிவுப்படுத்தவேண்டும்.

ஒப்பந்தத்தை கைச்சாத்திட அரசாங்கம் எடுத்திருந்த தீர்மானங்கள் தொடர்பில் வெளிப்படைத்தன்மையான பேச்சுவார்த்தைகள் அவசியமாகும். நான் எவர்மீதும் சேறு பூச இந்த கேள்விகளை எழுப்பவில்லை. தொழிற்சங்கங்கள்தான் இந்த விடயத்தை எனது கவனத்துக்கு கொண்டுவந்தன.

இந்த விடயம் தொடர்பில் தொழிற்சங்க உறுப்பினர்கள் துறைசார் அமைச்சரிடம் சென்று கேள்வியெழுப்பியபோது, தமக்கு ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்துதான் அந்த அமைச்சரவைப் பத்திரம் அனுப்பப்பட்டதாகவும் தமக்கு இதில் ஒன்றும் செய்ய முடியாது என்று பதிலளித்துள்ளடன், இதில் தாம் கையெழுத்திட்டதாகவும் கூறியுள்ளார்.

இதுதான் வெளிப்படைத் தன்மையா? எமது நாட்டில் 30 இற்கு அதிகமான என்.எல்.டி.பி பால் உற்பத்தி மையங்களையும் மில்க்ரோவையும் விற்பனை செய்வதா அரசாங்கத்தின் நோக்கம் என கேள்வியெழுப்புகிறோம். இதுதான் சௌபாக்கிய ஆட்சியின் எதிர்காலத் திட்டமா? செல்வந்தர்களுக்கு இது சௌபாக்கிய திட்டமாக இருக்கலாம். ஆனால், முழு நாட்டுக்கும் இது மோசமான திட்டம்-என்றார். (அ)

# சோற்றுப் பார்சலுக்குள் ஹெரோயினுடன் கைதியை பார்வையிட சென்றவர் கைது!

கொழும்பு, ஒக். 19

களுத்துறை சிறைச்சாலையில் கைதி ஒருவரை பார்வையிடச் சென்ற ஒருவர், தான் கொண்டு சென்ற பால் சோற்றுப் பார்சலில் 29 ஹெரோயின் பொதிகளை மறைத்து வைத்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டதாக களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

பாணந்துறை வெகட பிரதேசத்தை சேர்ந்த 23 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் கூறினர்.

பார்வையாளர்களை பரிசோதித்துக்கொண்டிருந்த சிறைச்சாலை அதிகாரி ஒருவர், சோற்றுப் பார்சலில் காணப்பட்ட பால் பாக்கெற்றை கண்டுபிடித்ததுடன் அதற்குள் 138 மில்லிகிராம் நிறை கொண்ட 29 பொக்கற்களில் போதைப்பொருள் மறைத்து வைக்கப்பட்டிருந்ததைக் கண்டறிந்தார்.

உடனடியாக அதனைக் கொண்டு சென்றவர் கைது செய்யப்பட்டார். (அ)

## ஜனாதிபதியின்...

பிரச்னை ஒன்றை எழுப்பி அவர் உரையாற்றினார்.

இதன்போது அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஜனாதிபதி தற்போது நாட்டில் இல்லை. பொலிஸாருக்கு பொறுப்பான அமைச்சரும் நாட்டில் இல்லை. அத்துடன் பொலிஸ் மா அதிபருக்கு வழங்கப்பட்டுள்ள சேவைகால நீடிப்பும் சட்ட விரோதமானது. பொலிஸ்மா அதிபருக்கு வழங்கப்பட்ட பதவி நீடிப்புக்கு அரசமைப்பு பேரவை அனுமதி வழங்கவில்லை என குறிப்பிடப்படுகிறது.

இதேவேளை ஜனாதிபதி வெளிநாடு செல்லும்போது நியமிக்கப்படுபவர்களை அரசமைப்பு பேரவையால் நீக்கமுடியாது என்று இன்னொரு தரப்பு கூறுகிறது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி தலைமையில் விசேட கூட்டமொன்று இடம்பெற்றது. மயிலத்தமடு - மாதவனை மேய்ச்சல் தரை பிரச்னை தொடர்பில் ஜனாதிபதி வழங்கிய பணிப்புரையை பொலிஸார் இன்று வரையில் பொலிஸாரால் மட்டக்களப்பில் செயல்படுத்தவில்லை.

பொலிஸ்மா அதிபர் பதவிக்கு மூவரின் பெயர்கள் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது. இவர்கள் மூவர் தொடர்பிலும் பிரச்னை இருந்தால் பாராளுமன்றம் ஊடாக கலந் துரையாடி அதற்கு தீர்வு காண வேண் டும். பொலிஸ்மா அதிபர் இல்லாத நேரத்தில் நாங்கள் பிரச்னைகளை யாரிடம் கூறுவது.

மட்டக்களப்பில் செயல்படுத்துமாறு ஜனாதிபதி கூறியதை யார் செயல்படுத்தப் போகின்றார். அது தொடர்பில் யாரை கேட்பது. நாட்டில் சட்டத்தை செயல்படுத்துவதற்கு யார் பொலிஸ்மா அதிபராக இருக்கின்றார். என்பதை குறிப்பிட வேண்டும்.

நாட்டில் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் போன்ற சம்பவம் மீண்டும் நடந்தால் அதற்கு யார் பொறுப்பு கூறுவது.இது தொடர்பில் ஆளும் கட்சியில் பொறுப்புடன் ஒருவர் பதிலளிக்க வேண்டும் என்று கேட்கின்றேன் - என்றார். (ஐ)

## பழைய...

பழைய பகைகளை மறப்போம் - என்று எல்லே குணவங்ச தேரர் தெரிவித்துள்ளார். எண்ணெய் தாங்கி விற்பனை செய்யப்பட்டமைக்கு வழக்கு தாக்கல் செய்தேன்.

சிங்கராஜ வனத்தில் உள்ள பகுதிகளை விற்பனை செய்யப்பட்டமைக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளேன். ரெலிக் கொம்மை விற்க போவதாக அரசாங்கம் கூறுகிறது. ரூபவாஹினி கூட்டுத்தாப னத்தை வழங்கப் போவதாக கூறினர். சுயாதீன தொலைக்காட்சியை விற்பனை செய்ய முயற்சிக்கின்றனர். இவ்வாறு தொடர்ந்தால் என்ன மிகுதியாக இருக்க போகிறது. இந்த பிரச்னையே தற்போது உள்ளது. வளங்களை ஏலத்தில் விடும் அரசாங்கங்களே ஆட்சியில் உள்ளன.

13ஆவது திருத்தின் ஊடாக காணி அதிகாரம் மற்றும் பொலிஸ் அதிகாரம் வழங்குப்படுமாயின் வழங்குபவர் பொறுப்பு கூற வேண்டும். அதுவே, எனது நிலைப்பாடு. ரணில் விக்கிரம சிங்கவால் அந்த இடத்துக்கு வரமுடியவில்லை. நாம் வழங்கிய அதிகாரத்தை கைமாற்றியுள்ளனர். அனைவரும் நன்கு ஒரு விடயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். இம்முறை இலகுவானது அல்ல. எவரும் கதைப்பதில்லை. அவன் திருடினான். இவன் திருடினான் அதேயே கூறிக்கொள்கின்றனர்.

நான் வடக்கில் உள்ள தமிழ் சகோதரர்களுக்கு ஒன்றைக் கூறிக்கொள்கிறேன். வடக்கு, கிழக்கு மாத்திரமல்ல. முழு நாட்டையும் மீட்பதற்கு வாருங்கள். உங்களுக்கும் இல்லை. எங்களுக்கும் இல்லை. வாருங்கள் சுதந்திர போராட்டத்தை போன்று சுதந்திரத்தை பெற்றுக் கொள்வதற்காக போராட வேண்டியுள்ளது. இரண்டாவது சுதந்திர போராட்டத்துக்காக அனைவரும் இணைய வேண்டும். பழைய பகைகளை மறப்போம் - என்றார். (ஐ)

## இரண்டாம்...

ஆழமான பொருளாதார நெருக்கடியை இலங்கையால் ஒரே இரவில் சமாளிக்க முடியாது என்றும், எனவே ஸ்திரத்தன்மை மற்றும் இயல்புநிலையை மீட்டெடுக்க பல சர்வதேச நாடுகளுடன் விவாதங்கள் நடத்தப்பட வேண்டும் என்பதை பொதுமக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் கூறியுள்ளார்.

கடந்த வருடம் இலங்கையில் இருந்த நிலைமை தற்போது மாறியுள்ளது. சில வேறுபாடுகளை களைவதற்கு சர்வதேச நாணய நிதியத்துடனான விவாதங்கள் மிகவும் வெற்றிகரமாக அமைந்துள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். (ஐ)

## இராணுவம்...

விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், வெள்ளிக்கிழமை ஹர்த்தாலை கடைப்பிடிக்குமாறு கோருகின்றோம். எங்களுடைய மக்கள் போராட்டத்தின் ஊடாக முன்னுக்கு வந்தவர்கள். போராட்டத்தின் குணாதிசயங்களை கொண்டவர்கள். இருந்தாலும் நீதித்துறை, நில அபகரிப்பு, பௌத்த விகாரைகளின் ஆக்கிரமிப்பு என்பன வடக்கு - கிழக்கில் மிக மோசமாக நடந்து வருகின்றன.

எங்களது மக்களின் பூர்வீகம் மற்றும் அவர்களின் நிலங்களை அபகரிப்பதன் ஊடாக எங்களுடைய மக்களின் வரலாற்றை சிதைக்கும் செயல்பாட்டை தடுத்து நிறுத்தும் வகையில் இந்த ஹர்த்தால் போராட்டத்தை நடத்தவுள்ளோம். இதற்கு ஆதரவு தருவார்கள் என நம்புகின்றோம். இருந்தாலும் சில சங்கடங்கள் இருக்கின்றன. அன்றாடம் உழைக்கின்ற மக்கள் தமது அன்றைய தேவைக்கு என்ன செய்வார்கள் என்ற கேள்வி எழுகிறது.

தற்போது புதிதாக அடாவடித்தனமான, ஜனநாயக விரோதமான செயல்பாடு நடக்கிறது. இராணுவ மற்றும் பொலிஸ் புலனாய்வுத் துறையினர் வர்த்தக நிலையங்களை நடத்துவோர், சிறுதொழில் செய்வோர், மரக்கறி வியாபாரம் செய்வோர் என அவர்களை மிரட்டி அவர்களை ஹர்த்தாலுக்கு ஆதரவு வழங்க வேண்டாம் எனக் கூறி வருகிறார்கள். அதற்கு எமது கண்டனத்தை தெரிவிக்கின்றோம் - என்றார். (ஐ)

## மின்...

மின்சார கட்டணங்கள் திருத்தியமைக்கப்பட்டு, அடுத்த திருத்தம் எதிர்வரும் ஜனவரி மாதம் மேற்கொள்ளப்படவுள்ள நிலையில், இந்த மாதத்திலிருந்து மேலும் கட்டண அதிகரிப்பு தேவையென இலங்கை மின்சார சபை பொதுப் பயன் பாடுகள் ஆணைக் குழுவுக்கு அறிவித்திருந்தது.

அந்த வகையில், மின்கட்டணத்தை 22 சதவீதம் அல்லது ஓர் அலகுக்கு 8 ரூபாய் உயர்த்த அனுமதி கோரப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், கோரப்பட்ட கட்டண உயர்வை நிராகரித்த பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு, திருத்தப்பட்ட அறிக்கையை சமர்ப்பிக்க உத்தரவிட்டது.

இந்நிலையில், எதிர்பார்த்த சதவீதத்தால் கட்டணங்கள் அதிகரிக்கப்படாவிட்டால், மின்சார சபையின் நட்டத்தை ஈடுகட்ட முடியாது என இலங்கை மின்சார சபை நேற்று புதன்கிழமை மீண்டும் அறிவித்துள்ளது.

பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று நடைபெற்ற உத்தேச மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பான பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஆலோசனை நிகழ்ச்சியில் அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர். இந்த உண்மைகளை ஆராய்ந்த பிறகே, மின் கட்டணத்தை உயர்த்துவதற்கான அனுமதி குறித்து முடிவு எடுக்கப்படும்.

## வடக்கில் மீன்பிடி...

தெரிவித்தார்.

கடந்த காலங்களில், மீன்பிடி கூட்டுத்தாபனம் நேரடியாக சட்ட முறைகளின் கீழ் மீன்களை இறக்குமதி செய்ய ஆரம்பித்ததன் மூலம் அதிக இலாபம் ஈட்டி வருகிறது. ஆனால், மீன்பிடித் துறையில் காணப்படும் ஏகபோக உரிமையை உடைப்பது எளிதான காரியம் அல்ல. எங்கள் பணிகளை குழப்ப அவர்கள் நிறைய முயற்சி செய்தனர். கூட்டுத்தாபனத்தில் இருந்தும் அதற்கு ஆதரவு இருப்பதாக அறியக்கிடைத்தது. அந்த சூழ்நிலையால், மீனவர்கள், நுகர்வோர் மற்றும் கூட்டுத்தாபனத்திற்கு பெரும் நட்டம் ஏற்பட்டது. எனவே, சவால்களுக்கு மத்தியிலும் அந்த மாபியாவை கட்டுப்படுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளோம்.

விநியோகஸ்தர்களிடமிருந்து ஒரு கிலோ மீன் ரூ.1750க்கு கொள்முதல் செய்யப்பட்டது. ஆனால், நேரடியாக இறக்குமதி செய்யும்போது ஒரு கிலோ 1250 ரூபாய்க்கு வாங்கலாம். கூட்டுத்தாபனத்தின் மாதாந்த மீன் தேவை 50000 தொன்களை விட அதிகமாகவுள் ளது. இவ்வாறான நிலைமைக்கு மத்தியில் கூட்டுத்தாபனம் நட்டத் தையே சந்திக்க நேரிடுகிறது.

அத்துடன், வடமாகாணத்தில் மீன்பிடித் தொழிலுக்கு பிரத்தியேகமான முதலீட்டு வலயமொன்றை நிறுவுவதற்கான ஏற்பாடும் தற்போது தயாரிக்கப் பட்டு வருகின்றது. அதன் மூலம் மீன்பிடி தொழில் தொடர்பான முதலீடுகளை இலங்கைக்குக் கொண்டுவந்து பெருமளவிலான மக்களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்க முடியும்.

அத்துடன் இவ்வருட உலக மீனவர் தினத்துடன் இணைந்ததாக நவம்பர் 19ஆம் திகதி முதல் 21ஆம் திகதி வரை வடமாகாணத்தை மையமாக வைத்து யாழ். மாவட்டத்தை மையமாக வைத்து வடக்கில் பல நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

நடமாடும் சேவை , மீன்பிடி அடையாள அட்டை வழங்கல், மீன்பிடி படகுகளை பதிவு செய்தல், மீன்பிடி சமிக்ஞைகளின் தொடர்பாடல் பிரச்னைகளை தீர்ப்பது உட்பட கடற்றொழில் அமைச்சுடன் தொடர்புள்ள அனைத்து நிறுவனங்களினாலும் வழங்கப்படும் அனைத்து சேவைகள் குறித்தும் கவனம் செலுத்தப்பட்டு தீர்வுகள் வழங்கப்படும்.

சீன அரசின் உதவியுடன் ஒருநாள் மீன்பிடி படகுகளுக்கு மண்ணெண்ணெய் மானியம் வழங்கும் திட்டம் இரண்டாவது முறையாக செயல்படுத்தப்படுகிறது. ஒரு மீனவருக்கு 153 லீற்றர் வழங்கப்படும் - என்றார்.

## எமது...

வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

“பிறப்புச் சான்றிதழ் உட்பட பதிவாளர் நாயகத்தின் திணைக்களத்துக்குரிய ஆவணங்களில் இனத்தை குறிப்பிடும் போது, இந்திய தமிழ் / சோனகர் என்பதை இலங்கை தமிழ் / சோனகர் என பயன்படுத்துவதற்கான ஏற்பாடுகள்“ எனும் தலைப்பின்கீழ் பதிவாளர் நாயகத்தால் வெளியிடப்பட்டுள்ள சுற்றுநிருபம் தொடர்பில் எமது அதிருப்தியையும் தெரிவித்து கொள்கிறோம் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளதாக அமைச்சின் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

இந்திய வம்சாவளித் தமிழ் மக்கள் விவகாரத்தில் பதிவாளர் நாயகத்தின் நிலைப்பாட்டுடன் எமக்கு உடன்பாடு கிடையாது. எமது மக்களுக்கு 200 வருடகால வரலாற்று அடையாளம் உள்ளது. 200 ஆவது வருடத்தில் அந்த வரலாற்று அடையாளத்தை அழிப்பதற்கு சிலர் முற்படுகின்றனர்.

இது ஏற்கத்தகாத விடயமாகும். இது சம்பந்தமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனும் பிரதமர் தினேஷ் குணவர்த்தனவுடனும் பேச்சு நடத்தி தீர்வை பெற்றுக் கொள்வதற்கு முற்படுவோம் - என்றார். (ஐ)

## வடக்கில்...

அறிக்கையையும் நேற்று அவர் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

அந்த அறிக்கையில், வடக்கு மாகாணத்தில் முப்படைகள், பொலிஸ், சிவில் பாதுகாப்பு திணைகளத்தால் காணிகள் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளன. இதில், கிளிநொச்சி மாவட்டத்தில் 4 ஆயிரத்து 378.8 ஏக்கர், யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2 ஆயிரத்து 433.79 ஏக்கர், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஆயிரத்து 578.27 ஏக்கர், வவுனியா மாவட்டத்தில் ஆயிரத்து 21. 55 ஏக்கர், மன்னார் மாவட்டத்தில் 130.77 ஏக்கர் என எல்லாமாக 9 ஆயிரத்து 543.18 ஏக்கர் காணிகள் படைகளின் ஆக்கிப்பில் உள்ளன - என்றார். (ஐ)

## தேர்தலை...

செயலாளர் போதியளவு நிதியை வழங்க முடியாது எனத் தெரிவித்திருந்தார் என பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று புதன்கிழமை பிரதமர் தினேஷ் குணவர்த்தன தேர்தல் சட்ட திருத்தம் தொடர்பான கலந்துரையாடலுக்கு அழைப்பு விடுத்த போது, எதிர்க்கட்சி தலைவர் அது தொடர்பில் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும், பல்வேறு சிக்கல்கள் காணப்படுவதால் தேர்தல் முறையை மாற்றுவது தொடர்பில் நாட்டு மக்கள் அனைவரும் பெரும் எதிர்பார்ப்புடன் உள்ளனர். சில பகுதிகளுக்கு உறுப்பினர்கள் இல்லாமல் போவதால் ஏற்படும் நிலைமை தொடர்பிலும் அனைவரும் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர்.

அதனை கருத்தில் கொண்டு அது தொடர்பில் மேற்கொள்ளப்படும் கலந்துரையாடலில் அனைத்து அரசியல் கட்சிகளின் தலைவர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். நாடு வங்குரோத்து நிலையில் இருந்த போதே உள்ளூராட்சி சபை தேர்தல் தொடர்பில் அறிவிக்கப்பட்டது. அந்த நிலையிலேயே நிதியமைச்சின் செயலாளர் போதியளவு நிதியை வழங்க முடியாது என தெரிவித்திருந்தார்.

தனிப்பட்ட ரீதியில் தேர்தலுக்கு செலவிடுவதற்கு நிதி கிடைக்கலாம். ஆனால் அரசாங்கம் என்ற வகையில் அதற்கான நிதியை விடுவிக்க முடியாத நிலையிலேயே தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. பாராளுமன்ற தேர்தல் முறைமையில் திருத்தம் மேற்கொண்டு கலப்பு தேர்தல் முறைமை ஒன்றைக் கொண்டு வருவோம் என நாட்டுக்கு தெரிவித்தே மக்கள் ஆணையை நாம் பெற்றுள்ளோம்.

அது தொடர்பில் எமது அரச தலைவர்கள் இந்த பாராளுமன்றத்தில் பல தடவைகள் தெரிவித்துள்ளார்கள். நாம் வரவு - செலவுத் திட்டத்திற்கு அனுமதியைப் பெற்றுக் கொள்ளும் போதும் தேர்தல் ஆணைக்குழுவின் செயல்பாடுகள் தொடர்பிலும் பாராளுமன்றத்தில் இரு தரப்பினரும் கேட்டுக் கொண்டதாக சபையில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

அதனை செயற்படுத்துவது தொடர்பில் பாராளுமன்றத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் ஆகியவற்றை கலப்பு முறையில் நடத்துவது தொடர்பான யோசனைகள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ அந்த யோசனையை அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளார். அதற்கிணங்க அமைச்சரவையானது பாராளுமன்றத்தில் அனைத்து உறுப்பினர்களினதும் கருத்துக்களை பெற்றுக் கொண்டு மீண் டும் அறிவிக்குமாறு தெரிவித்திருந்தது - என்றார். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# பொலிஸ்மா அதிபர் நியமனத்தால் சபையில் நேற்று அமைதியின்மை!

கொழும்பு, ஒக். 19

**பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பில் ஏற்பட்ட வாதப்பிரதிவாதத்தினால் பாராளுமன்றத்தில் நேற்று அமைதியின்மை ஏற்பட்டது.**

பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்கு ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட சேவை நீடிப்புக்கு அனுமதி வழங்காதிருக்க நேற்று முன்தினம் கூடிய அரசியலமைப்புச் சபை தீர்மானித்திருந்தபோதும், ஒரு மணி நேரத்திற்குள் அவருக்குச் சேவை நீடிப்பு வழங்க ஜனாதிபதியினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன கடந்த மார்ச் மாதம் 26 ஆம் திகதி ஓய்வுபெறவிருந்த நிலையில், அவரது சேவைக்காலம் மேலும் 3 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டது.

குறித்த சேவை நீடிப்பு கடந்த ஜூன் மாதம் 26 ஆம் திகதியுடன் நிறைவடைந்தது.

தொடர்ந்து மீண்டும் ஒருமுறை 3 மாத காலத்துக்கு சி.டி.விக்ரமரத்னவின் சேவைக்காலம் நீடிக்கப்பட்டதுடன், குறித்த 3 மாத காலப்பகுதியில் புதிய பொலிஸ்மா அதிபரை நியமிக்கவேண்டும் என்ற அடிப்படையில் அரசியலமைப்பு பேரவை அதற்கு அனுமதி வழங்கியது.

இருப்பினும், கடந்த 13 ஆம் திகதி பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவின் பதவிக்காலம் முடிவடைந்த நிலையில், ஜனாதிபதி மீண்டும் 3 வாரங்களுக்கு அவரது சேவையினை நீடித்தார்.

இந்த நியமனத்தை பரிசீலிப்பதாக நேற்று முன் தினம் பிற்பகல் அரசியலமைப்பு பேரவை கூடிய நிலையில், பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட சேவை நீடிப்பை அரசியலமைப்புச் சபை ஏகமனதாக நிராகரித்துள்ளது.

எவ்வாறாயினும், குறித்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டு ஒரு மணித்தியாலயத்துக்குள் ஜனாதிபதியினால் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்கு மேலும் சேவை நீடிப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சீனாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பீஜிங்கில் இருந்து இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் நாட்டில் இல்லாத நிலையில், பொலிஸ்மா அதிபரை பதவி நீக்கம் செய்வதற்கு அரசியலமைப்புப் பேரவை தீர்மானித்தமையானது பாரிய தவறு என ஜனாதிபதி சுட்டிக்காட்டி யுள்ளார்.

இந்த நிலையிலே, பொலிஸ்மா அதிபர் நியமனம் மற்றும் இந்த விடயத்தில் எழுந்துள்ள பிரச்னைகள் தொடர்பில் நேற்று பாராளுமன்றத்திலும் கருத்துக்கள் வெளியிடப்பட்டன. இதன்படி, பாதுகாப்பு அமைச்சர் மற்றும் பொது பாதுகாப்பு அமைச்சர் ஆகியோர் நாட்டில் இல்லாத நிலையில் பொலிஸ்மா அதிபரின் பதவி கேள்விக்குறி யாகியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்தார்.

அத்துடன், பொலிஸ் மா அதிபர் இன்றி நாட்டை எவ்வாறு முன்கொண்டு செல்வது எனவும், நாட்டு மக்களின் பாதுகாப்பை யார் உறுதிப்படுத்துவது எனவும் அவர் கேள்வி எழுப்பினார்.

இந்த நிலையில், பதிலளித்த பிரதமர் தினேஷ் குணவர்தன குறித்த பிரச்னை தொடர்பில் ஜனாதிபதியினால் ஆலோசனை வழங்கப்பட்டு இணக்கப்பாடு எட்டப்பட்டதாக தெரிவித்தார்.

இதன்படி, பொலிஸாரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

தொடர்ந்து, ஜனாதிபதி சபையில் இல்லாத நிலையில் அவர் தொடர்பில் குற்றச்சாட்டுகளை முன்வைப்பது தவறு என பாராளுமன்ற உறுப்பினர் நிமல் லான்சா தெரிவித்தார். (அ)

## பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை சபையில் சமர்ப்பிக்கப்போவதில்லை

### சபாநாயகர் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஒக். 19

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் போவதில்லை என சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்விலேயே மகிந்த யாப்பா அபேவர்தன இந்த அறிவிப்பை வெளியிட்டார்.

பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் இந்த சட்டமூலம் உள்ளடக்கப்பட்டிருந்தபோதிலும், அது முன்வைக்கப்படாது எனவும் மகிந்த யாப்பா அபேவர்தன கூறினார்.

இதேவேளை, இணையவழி பாதுகாப்பு சட்டமூலத்தை எதிர்த்து 45 மனுக்கள் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக சபாநாயகர் பாராளுமன்றத்துக்கு அறிவித்தார். (அ)

## பூநகரியில் வெடிபொருட்கள் மீட்பு!



கிளிநொச்சி, ஒக். 19

பூநகரி எட்டாம் கட்டை பகுதியில் உள்ள காட்டுப் பகுதியில் பத்து மோட்டார் குண்டுகள் கிளிநொச்சி பொலிஸாரால் மீட் கப்பட்டுள்ளன

கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய சம்பவ இடத்துக்கு விரைந்த கிளிநொச்சி பொலிஸார் 60 எம்.எம் குண்டுகள் 08, 04 எம்.எம் 01 குண்டு ஒன்று, கைக்குண்டு ஒன்று ஆகியவற்றை பார்வையிட்டனர்.

இதனை அடுத்து நீதிமன்ற அனுமதியு டன், நேற்று சிறப்பு அதிரடிப்படையினரால் குறித்த வெடிபொருட்கள் செயலிழக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. (அ)

## ரயிலில் மோதுண்டு ஒருவர் பலி!

திருமலை, ஒக். 19

திருகோணமலை - தம்பல காமம் பொலிஸ் பிரிவுக்குட் பட்ட முள்ளிப்பொத்தானை பகுதியில் இரு பிள்ளைகளின் தந்தை ரயிலில் மோதுண்டு ஸ்த லத்தில் பலியானார் என பொலி ஸார் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் நேற்று முன் தினம் செவ்வாய்க் கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.

திருகோணமலையில் இருந்து கொழும்புக்குச் செல லும் ரயி லில் மோதுண்டே அவர் உயிரி ழந்துள்ளார்.


இவ்வாறு உயிரிழந்தவர் முள்ளிப்பொத்தானை சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான தாவூது சலீம் என்பவராவார்.

மூவர் மது அருந்திவிட்டு வீடு திரும்பும்போது உயிரிழந்த வர் தண்டவாளத்தில் உறங்கிய தாக ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரியவந்தது.

உயிரிழந்தவரின் சடலம் கந் தளாய் தளவைத்திய சாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் பிரேத பரிசோதனையின் பின் உறவி னர்களிடம் ஒப்படைக்கப்படவுள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர்.

(அ)




## நிறைவேற்று அதிகாரத்தை ஒழிப்பது எமது நோக்கமல்ல

### கூறுகிறார் அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, ஒக். 19

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவது கடினமான பணி என்பதால் அதனை நீக்குவதற்கு எந்தவொரு நடவடிக்கை எடுக்கவில்லை நீதி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய நீதி அமைச்சர்,

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமையை நீக்குவது என்பது ஒரு சிக்கலான மற்றும் கடினமான செயலாகும்.

தற்போதைய பாராளுமன்றத்தில் அதனைச் செய்ய முடியாது. இது இந்நாட்டு மக்கள் பங்குபற்றவேண்டிய ஒரு விடயமாகவுள்ளது.

இருப்பினும் பாராளுமன்றத்துக்கு உறுப்பினர்களை தெரிவு செய்வதற்கு புதிய தேர்தல் முறையை அறிமுகப் படுத்துவதற்கு முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ளோம்.

இதன்படி, 160 உறுப்பினர்களை "தொகுதிவாரி " முறையின் மூலம் தெரிவு செய்வதற்கும், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பாராளுமன்ற உறுப்பினர்களை தேசியப் பட்டியல் மூலமும் ஏனையவர்களை விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் ஊடாகவும் தெரிவுசெய்யும் வகையில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், சிலர் "தொகுதிவாரி" முறையின் கீழ் தெரிவு செய்யப்படும் எம்.பி.க்களின் எண்ணிக்கையை 150 ஆகக் குறைக்க விரும்புகிறார்கள். மேலும் சிலர் அதை 140 ஆகக் குறைக்க விரும்புகிறார்கள்.

இது தொடர்பான விவாதங்களுக்கு அரசு தயாராக உள்ளது. மக்கள் இந்த மாற்றத்தை விரும்புகிறார்கள். எனவே, ஒரு மாற்றம் அவசியம் - என்றார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 19.10.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

ஈழநாடு



# தென்னாபிரிக்க அணியை வீழ்த்தி அதிர்ச்சி கொடுத்தது நெதர்லாந்து



தர்மசாலா, ஒக். 19

நடப்பு உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரின் 15ஆவது போட்டியில் தென்னாபிரிக்க அணியை 38 ஓட்டங்களால் வீழ்த்தியுள்ளது நெதர்லாந்து அணி. இது நடப்பு தொடரில் பெரிய அணிகளுக்கு வளந்து வரும் அணிகள் கொடுத்துள்ள இரண்டாவது பேரிடியாக அமைந்துள்ளது. முன்னதாக, கடந்த 15ஆம் திகதி இங்கிலாந்து அணியை ஆப்கானிஸ்தான் அணியை வீழ்த்தி இருந்தது குறிப்பிடத்தக்கது.

தர்மசாலாவில் நடைபெற்ற இந்தப் போட்டி மழை காரணமாக தலா 43 ஓவர்கள் கொண்ட போட்டியாக மாற்றி அமைக்கப்பட்டது. நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்க அணி பந்து வீச்சைத் தெரிவு செய்தது. 43 ஓவர்களில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 245 ஓட்டங்கள் எடுத்தது நெதர்லாந்து. அந்த அணியின் தலைவர் ஸ்கொட் எட்வர்ட்ஸ் 69 பந்துகளில் 78 ஓட்டங்கள் குவித்தார். 10 பௌண்ட்ரிகள் மற்றும் ஒரு சிக்ஸர் அவரது இன்னிங்ஸில் அடங்கும். கடைசி 9 ஓவர்களில் 104 ஓட்டங்களை அந்த அணி எடுத்திருந்தது.

246 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை தென்னாபிரிக்கா விரட்டியது. இந்தப் போட்டிக்கு முன்னதாக நடப்பு உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை மற்றும் அவுஸ்திரேலியாவை வீழ்த்தியிருந்தது தென்னாபிரிக்கா. இந்த சூழலில் அந்த அணியின் நான்கு முதல்நிலை துடுப்பாட்ட வீரர்களின் விக்கெட்களை மிக விரைவாக வீழ்த்தியது நெதர்லாந்து.

அணித் தலைவர் பவுமா, குயின்ரன் டி கொக், வான் டர் டூசன், மார்க்ரம் ஆகியோரின் விக்கெட்களை 21 பந்துகளுக்குள் வீழ்த்தப்பட்டன. அதாவது 7.6 முதல் 11.2 ஓவர்களுக்குள் அவர்களது விக்கெட்களை நெதர்லாந்து கைப்பற்றியது. இந்த நேரத்தில் வெறும் 8 ஓட்டங்கள் மட்டுமே நெதர்லாந்து கொடுத்ததிருந்தது. 44 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்து தென்னாபிரிக்கா தடுமாறியது.

பின்னர் கிளாஸன் மற்றும் மில்லர் இணைந்து ஓரளவு தாக்குப்பிடித்தனர். இருந்தும் கிளாஸன், 28 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து மார்கோ யான்சென், மில்லர் (52 பந்துகளில் 43 ஓட்டங்கள்), ஜெரால்ட் கோட்ஸி (22 ஓட்டங்கள்), ரபாடா, கேஷவ் மகாராஜ் ஆகியோர் ஆட்டமிழந்தனர். 42.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 207 ஓட்டங்கள் எடுத்தது தென்னாபிரிக்கா.

சர்வதேச கிரிக்கெட்டில் முன்னணி அணிகளுக்கு அவ்வவ்போது நெதர்லாந்து சவால் அளித்துள்ளது. 2009ஆம் ஆண்டு ரி - 20 கிரிக்கெட் தொடரில் இங்கிலாந்தை வீழ்த்தி அதிர்ச்சி கொடுத்திருந்தது. தொடர்ந்து கடந்த ஆண்டு நடைபெற்ற ரி -20 உலகக் கிண்ணத் தொடரில் சுப்பர் 12 சுற்றில் 13 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தென்னாபிரிக்காவை வீழ்த்தி தொடரில் இருந்து வெளியேற்றி இருந்தது. தற்போது அதனை ஒருநாள் கிரிக்கெட் வடிவிலும் செய்துள்ளது. தரமான பந்துவீச்சு மற்றும் களத்தப்பு மூலம் இந்த வெற்றியை நெதர்லாந்து சாத்தியம் ஆக்கியுள்ளது.

(ஐ)

# கோலியை விடவும் ரோஹித் சிறப்பாக செயல்படுகிறார்!

புதுடில்லி, ஒக். 19

விராட் கோலியையும் விடவும் ரோஹித் சர்மா அணித் தலைமைப் பதவியில் சிறப்பாக செயல்பட்டு வருகிறார் என்று றிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித் தலைவர் றிக்கி பொண்டிங் ஐ.சி.சி. இணையதளத்துக்கு அளித்த ஒரு பேட்டியில் கூறியதாவது: -

இந்திய அணிக்கு சாதகமான அம்சமே அதன் அணித் தலைவர் ரோஹித் சர்மாதான். அவர் எப்போதும் இயல்பாக இருக்கிறார். எல்லா விஷயங்களையும் பதற்றமின்றி செய்கிறார். அவர் துடுப்பெடுத்தாடும் போதுகூட இதை நீங்கள் பார்க்கலாம். ஆடுகளத்துக்கு உள்ளேயும், வெளியேயும் அவர் நடந்து கொள்ளும் விதத்திலும் இந்த குணத்தை காணலாம்.

விராட் கோலி போன்ற வீரர்களை எடுத்துக் கொண்டால், அவர் கொஞ்சம் உணர்வுபூர்வமானவர். ரசிகர்க ளின் பேச்சுக்கு செவி சாய்த்து அதற்கு ஏற்ப ஆக்ரோஷமாக விளையாடக்கூடியவர். இது போன்ற குணம் கொண்ட ஒருவர் அணித் தலைமை அழுத்தத்தை சமாளிப்பதை சற்று கடினமாக கருதலாம். ஆனால், ரோஹித் சர்மா இதில் நன்றாக இருக்கிறார். அவர் உன்னதமான ஒரு நபர். இந்திய அணியின் சிறந்த வீரராக நீண்ட கால மாக செயல்படுகிறார். மேலும்



அணித் தலைவராக இந்திய அணிக்கு மிகச்சிறந்த பணியை செய்து கொண்டிருக்கிறார் - என்றார்.

ஜெய்சிறீராம் விவகாரம்:

# சர்வதேச கிரிக்கெட் சபையிடம் பாகிஸ்தான் நிர்வாகம் முறைப்பாடு!



பெங்களூர், ஒக். 19

இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டியின்போது பெவிலியன் திரும்பிய பாகிஸ்தான் வீரர் முகமது ரிஸ்வானை நோக்கி 'ஜெய் ஸ்ரீராம்' என ரசிகர்கள் முழக்கமிடும் காணொலி சமூக வலைதளத்தில் கவனம் பெற்றது. இந்த சூழலில் இது தொடர்பாக பாகிஸ்தான் கிரிக்கெட் சபை சர்வதேச கிரிக்கெட் சபையிடம் முறைப்பாடு செய்துள்ளது.

கடந்த 14ஆம் திகதி அகமதாபாத் நகரில் உள்ள நரேந்திர மோடி கிரிக்கெட் மைதானத்தில் இந்தப் போட்டி நடைபெற்றது. இதில் இந்திய அணி 7 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்நிலையில், ரிஸ்வானை நோக்கி எழுப்பப்பட்ட 'ஜெயஸ்ரீராம்' முழக்கம் அரசியல் ரீதியாக அதிர் வலைகளை ஏற்படுத்தியது.

"பாகிஸ்தான் பத்திரிகையாளர்களுக்கான வீசா வழங்கும் நடைமுறையில் நிலவும் தாமதம், பாகிஸ்தான் ரசிகர்களுக்கு வீசா கொள்கை இல்லாதது குறித்தும் மீண்டும் ஐ.சி. சியிடம் எதிர்ப்பை பதிவு செய்துள்ளோம். மேலும், கடந்த 14ஆம் திகதி இந்தியா மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டி நடைபெற்றது. இதில் பாகிஸ்தான் அணி வீரர்களை இலக்கு வைத்து மைதானத்தில் நடந்த சம்பவத்தை கண்டித்தும் முறைப்பாடு அளித்துள்ளோம்" என பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் எக்ஸ் தளத்தில் தெரிவித்துள்ளது.



# பாகிஸ்தான் வீரர்களுக்கு வைரஸ் காய்ச்சல் பரவல்!

பெங்களூர், ஒக். 19

பாகிஸ்தான் அணியில் பல வீரர்கள் திடீரென வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உலகக் கிண்ணக் கிரிக்கெட்டில் பாகிஸ்தான் அணி அடுத்து அவுஸ்திரேலியாவை நாளை வெள்ளிக்கிழமை பெங்களூரில் எதிர்கொள்கிறது. இந்த நிலையில் பாகிஸ்தான் அணியில் பல வீரர்கள் திடீரென வைரஸ் காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர்.

அவர்களில் பெரும்பாலானோர் முழுமையாக குணமடைந்து விட்டனர். எனினும், சிலர் மருத்துவ கண்காணிப்பில் இருக்கின்றனர் என்று அந்த அணியின் செய்தி தொடர்பாளர் கூறியுள்ளார். தொடக்க ஆட்டக்காரர் அப்துல்லா ஷபிக் அவரது அறையில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளார் - என்றும் தெரிவிக்கப்பட்டது.

# என்னை கட்டியணைத்த சிறுவன் இந்தியனே!

முஜீப் உர் ரஹ்மான்



புதுடில்லி, ஒக். 19

புதுடில்லியில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் இங்கிலாந்து அணியை 69 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றி பெற்றது ஆப்கான் அணி. உலகக் கிண்ண வரலாற்றில் அந்த அணி பதிவு செய்துள்ள இரண்டாவது வெற்றி இது. இந்தப் போட்டியில் 285 ஓட்டங்களை துரத்திய இங்கிலாந்து அணி தோல்வியை தழுவியது.

இந்தப் போட்டியில் ஆட்ட நாயகன் விருதை வென்றார் ஆப்கான் கிரிக்கெட் அணியின் வீரர் முஜீப் உர் ரஹ்மான். இந்தப் போட்டியில் 16 பந்துகளில் 28 ஓட்டங்கள் எடுத்தார். அதேபோல 10 ஓவர்கள் 3 விக்கெட்களை அவர் கைப்பற்றி இருந்தார். அதன் காரணமாக அவர் ஆட்ட நாயகன் விருதையும் வென்றார்.

இப்போட்டி முடிந்த பின் முஜீப் உர் ரஹ்மானை ஒரு சிறுவன் அரவணைத்து அழுத காணொலி ஒன்று வெளியாகி வைரலானது. வலைதளவாசிகள் பலரும் அச்சிறுவன் ஆப்கானிஸ்தான் நாட்டைச் சேர்ந்தவராக இருக்கக் கூடும் எனக் கூறிவந்தனர். இந்நிலையில், அச்சிறுவன் யார் என்பதை முஜீப் உர் ரஹ்மான் தனது எக்ஸ் வலைதளத்தில் வெளிப்படுத்தியுள்ளார்.

"அச்சிறுவன் ஆப்கான் கிடையாது. அவன் ஓர் இந்திய சிறுவன். எங்களின் வெற்றிக்கு அச்சிறுவன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினான். அந்தக் குட்டி பையனை டில்லியில் சந்தித்தது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. கிரிக்கெட் என்பது வெறும் விளையாட்டு அல்ல அது ஓர் உணர்வு.

டில்லியில் எங்களுக்கு ஆதரவளித்த அற்புதமான ரசிகர்கள் அனைவருக்கும் மிக்க நன்றி. அவர்கள் வெளிப்படுத்திய அன்பும் ஆதரவும் மகத்தானது. ரசிகர்களின் தொடர்ச்சியான ஆதரவிற்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். அன்புக்கு நன்றி டிஜல்லி" என உருக்கமாக பதிவிட்டுள்ளார்.

(ஐ)

# இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலும் காஸா போரும்!

காஸாவைத் தளமாகக் கொண்டு செயல்படும் தீவிரவாத அமைப்பான ஹமாஸ் அமைப்பு, கடந்த வாரம் இஸ்ரேல் மீது நடத்திய கொடூர தாக்குதலுக்குப் பிறகு சர்வதேச அளவில் எதிர்மறையாக பெருங்கவனம் பெற்றுள்ளது.

பல்வேறு நாடுகளில் தடை செய்யப்பட்டுள்ள தீவிரவாத அமைப்பான ஹமாஸ் தரை, வான் மற்றும் கடல் வழியாக தாக்குதல் நடத்தி ஆயிரத்திற்கும் மேற்பட்ட இஸ்ரேலியர்களைக் கொன்று, பலரையும் பிணைக்கைதிகளாக பிடித்துச் சென்று, ஒட்டுமொத்த இஸ்ரேல் ராணுவத்தை கடும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

அக்டோபர் 7-ஆம் தேதி ஹமாஸ் அமைப்பு நடத்திய இந்தத் தாக்குதலின் மூலம் இஸ்ரேலின் பாதுகாப்பு வியூகங்கள் மிகப் பலம் பொருந்தியவை என்ற கருத்து உடைத்தெறியப்பட்டதுடன், இஸ்ரேல் உளவு அமைப்பின் திறனைக் கேலிக்குரியதாக்கியது.

மறுபுறம், மிகுந்த பாதுகாப்பு உணர்வுடைய இஸ்ரேலின் மீது எப்படி இப்படியொரு தாக்குதல் நடத்த முடிந்ததென தீவிரவாத இயக்கங்கள் மத்தியில் ஹமாஸ் அமைப்பின் அந்தஸ்து உயர்ந்துள்ளது.

இந்தத் தாக்குதல் குறித்த தகவல்கள் முன்பே இஸ்ரேலுக்கு கிடைத்திருந்தும், அவற்றை இஸ்ரேல் அலட்சியம் செய்துவிட்டது என்பது உள்ளிட்ட ஏராளமான சதிக் கோட்பாடுகளும் பேசப்பட்டு வருகின்றன. ஆனால் இவை எதுவும் நம்பகத் தன்மைக்கு உகந்ததாக இல்லை.


இந்த விவகாரத்தில் இஸ்ரேல் உளவு அமைப்பின் தோல்வி தெளிவாகத் தெரிகிறது. இருப்பினும் இஸ்ரேலின் அரசியல் தலைமை இதுகுறித்த எந்த உடனடி விளக்கமும் அளிக்க மறுத்துவிட்டது. அந்நாட்டு ராணுவமும் இதுகுறித்துப் பேசத் தயாராக இல்லை. ஹமாஸ் அமைப்பை ஒழித்துக்கட்டுவதே அதன் தலையாய பணியாக உள்ளது. பாதுகாப்பு மீறல் குறித்த கேள்விக்குப் பதிலளித்த இஸ்ரேல் ராணுவ தலைமை செய்தித் தொடர்பாளர் டேனியல் ஹகாரி, "முதலில் நாம் சண்டையிடுவோம், பிறகு இதுகுறித்து ஆய்வு நடத்துவோம்" எனத் தெரிவித்துள்ளார்.

### வெளியேற்றம்

ஹமாஸ் இலக்குகள் மீது வான்வழி தாக்குதல்களையே அதிகமாக நடத்தி வந்த இஸ்ரேல் ராணுவம் காஸா பகுதியில் தரைவழித் தாக்குதல்களையும் சமீபத்தில் தொடங்கியுள்ளது. வடக்கு காஸா பகுதியில் உள்ள பத்து லட்சத்திற்கும் அதிகமான மக்கள் 24 மணி நேரத்திற்குள் அங்கிருந்து வெளியேற வேண்டும் என இஸ்ரேல் உத்தரவிட்டது தரைவழித் தாக்குதலுக்கான எச்சரிக்கையாகவே பார்க்கப்பட்டது.

முன்னதாக, ஹமாஸ் அமைப்பு வெளிநாட்டவர்கள் உட்பட 150 பேரை இஸ்ரேலில் இருந்து பிணைக் கைதிகளாகக் கடத்திச் சென்றது. மேலும் அவர்களைக் காஸாவிற்கு கொண்டு சென்று தரைவழித் தாக்குதலைத் தடுக்கவும், தற்போது சிறையில் உள்ள ஹமாஸ் அமைப்பின் செயற்பாட்டாளர்களை விடுவிக்கக் கோரி இஸ்ரேலை கட்டாயப்படுத்தவும் திட்டமிட்டது. ஆனால், இஸ்ரேலுக்கு வேறு திட்டங்கள் இருப்பதாகத் தெரிகிறது.

ராணுவ நடவடிக்கைகளின் மூலமாகவே பயங்கரவாதிகளை வெளியேற்றுவதற்கும், பணயக் கைதிகளை மீட்பதற்கும் திட்டமிடுகிறது. பணயக்கைதிகள் விஷயத்தில் பேச்சுவார்த்தைக்கோ, சமரசத்திற்கோ இடமில்லை என்ற இஸ்ரேலின் கொள்கை கடும் சோதனையில் உள்ளது. பிற நாடுகளின் குடிமக்கள் உட்பட ஏராளமான அப்பாவி பொதுமக்கள் கடத்தப்பட்டிருப்பதால் இஸ்ரேல் அதன் நிலைப்பாட்டை மாற்றுமா இல்லையா என்பது காஸாவில் உள்ள பிரமாண்டமான நிலத்தடி சுரங்கப் பாதைகளுக்குள்ளிருந்து ஹமாஸ் இயக்கத்தினரை வெளியேற்றும் திறனைப் பொருத்தது.






### ஏமாற்றுத் தந்திரம்

இஸ்ரேலை உள்ளடக்கிய புவியியல் பகுதியான வரலாற்றுக் கால பாலஸ்தீனத்தில் இஸ்ரேல் அரசை அழித்து, முஸ்லிம் அல்லாதவர்களை அகற்றி ஒரு சுதந்திரமான இஸ்லாமிய அரசை நிறுவுவதே ஹமாஸின் குறிக்கோள் எனக் கூறப்படுகிறது.

இதனால், இஸ்ரேலுக்கு எதிராகத் தற்கொலைப் படை தாக்குதல் உள்ளிட்ட பலவிதமான தாக்குதல்களை ஹமாஸ் மேற்கொள்ளத் தொடங்கியது. ஆனால், இவையெல்லாம் பிராந்திய தலைப்புச் செய்திகளைத் தாண்டி வெற்றி பெறவில்லை.

கடந்த இரண்டு ஆண்டுகளாக இஸ்ரேலுக்கு எதிரான நடவடிக்கைகள், பேச்சைக் குறைத்து, 2007ல் வன்முறையின் மூலமாக கைப்பற்றிய, வறுமையில் உள்ள காஸா பகுதியை நிர்வகிப்பதில் முழுக் கவனம் செலுத்துவதாக ஹமாஸ் போலித் தனத்தைக் காட்டியது.

மேலும் பயங்கரவாதத் தாக்குதல்கள் எதையும் திட்டமிடாமல், செயலற்றதாக மாறும் அளவில் நிலையைக் கவனமாக உருவாக்கியது. இதனால் ஹமாஸ் சூழ்ச்சியில் இஸ்ரேல் விழுந்தது.

அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட சிறிய அளவிலான தாக்குதல்கள், ஏவப்பட்ட சில ஏவுகணைகளை இஸ்ரேல் வழக்கமாக முறியடித்தது. இந்தப் பகுதி முழுவதும் தங்கள் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது என்ற தவறான நம்பிக்கையை இஸ்ரேலுக்கு அளித்தது ஹமாஸ்.

**டி.கே. வினீத்**

சமாதானத்தின் ஒரு பகுதியாக, இஸ்ரேல் 18,000 பாலஸ்தீனர்களை தங்கள் நாட்டில் வேலை செய்ய அனுமதித்தது.

மேலோட்டமாகப் பார்த்தால், இஸ்ரேலில் வேலைவாய்ப்புகள், சிறந்த ஊதியம் போன்றவை நன்றாக இருந்தன. இதனால் காஸாவிலிருந்து பெரிய தாக்குதல்கள் ஏதும் இல்லை, இஸ்ரேலிய உளவுத் துறை நிறுவனங்களும் ஹமாஸ் பற்றி கவலைப்படத் தகுந்த அளவில் எந்த உரையாடலையும் மேற்கொள்ளவில்லை. இருப்பினும் ஹமாஸ் மிகப் பெரிய திட்டங்களைக் கொண்டிருந்தது. அதன் வரலாற்றில் மிகப் பெரிய தாக்குதலுக்குத் தயாராகும் நேரத்திற்குக் காத்திருந்தது.

இஸ்ரேலின் அதிநவீன உளவுத் துறை கண்காணிப்பைத் தவிர்ப்பதற்காக, ஹமாஸ் படையினர் தாக்குதலைத் திட்டமிடும் போது மொபைல் போன்கள், பிற மின்னணு சாதனங்களைத் தவிர்த்து நேரடியாகவே தொடர்பு கொண்டனர். அவர்கள் தனியாகவும், பொதுக் கூட்டங்கள் மூலமாகவும், ரகசியமாக செய்திகளை அனுப்பினர். இதனால் ஹமாஸ் படையினர் எந்தக் கவலையும் இன்றி பொதுவிலேயே பயிற்சி பெற்றனர். இஸ்ரேலின் பாதுகாப்புப் படையும் நிம்மதியாக இருந்தது. அதேநேரத்தில் உச்ச நீதிமன்றத்தின் அதிகாரங்களைக் குறைக்கும் பல மாத யோசனையில் இஸ்ரேல் இருந்ததால் மக்களும் அதிருப்தி அடைந்தனர்.

அதிகபட்ச உயிரிழப்பை ஏற்படுத்த ஹமாஸ் படையினர், செப்டம்பர் 29 முதல் அக்டோபர் 6 ஆம் தேதி வரை கொண்டாடப்படும் யூதர்களின் "சுக்கோட்" பண்டிகை விடுமுறைக் காலத்தைத் தேர்வு செய்தனர்.

### ஹமாஸைச் சீண்டியது எது?

பாலஸ்தீனப் பிரச்சினையே உலக நாடுகளால் ஓரங்கட்டப்பட்டுவிட்டதைப் போன்ற ஒரு நிலையேற்பட, குறிப்பாக, இஸ்ரேலுடன் அரபு நாடுகளே நெருக்கம் கொள்ளத் தொடங்கிவிட்ட நிலையில் ஹமாஸ் அமைப்பினர் சீண்டப்பட்டிருக்கலாம் என்று நிபுணர்கள் நம்புகின்றனர்.

ஐக்கிய அரபு அமீரகம், மொராக்கோ, பஹ்ரைன் மற்றும் சூடான் ஆகிய நாடுகளுடன் உறவுகளை இயல்பு நிலைக்குக் கொண்டுவரும் வகையில் ஆபிரகாம் ஒப்பந்தத்தில் இஸ்ரேல் கையெழுத்திட்டதை ஹமாஸ் கடுமையாக எதிர்த்தது.

ஈரான் போன்ற பொதுவான நாடுகளை எதிர்கொள்ள டிரம்ப் நிர்வாகத்தின் ஆதரவுடன் 2020-21ல் ஒப்பந்தங்கள் போடப்பட்டன.

ஹமாஸின் மிகப் பெரிய நோக்கம் என்னவெனில், இஸ்ரேலிய சிறைகளில் உள்ள 5,000 பாலஸ்தீன கைதிகளை விடுவிப்பதும், காஸா மீதான 16 ஆண்டு கால முற்றுகையை நீக்குவதும் இஸ்லாத்தின் மூன்றாவது புனிதத் தலமான அல் அக்ஸா மசூதியில் இஸ்ரேலிய தாக்குதல்களைத் தடுப்பதுமே ஆகும்.

அவ்வாறு செய்வதன் மூலம் அனைத்து பாலஸ்தீனர்களும் ஹமாஸின் ஆளுகையின் கீழ் சிறந்த முறையில் பாதுகாப்பாக இருக்கின்றனர் என்பதை ஹமாஸ் தெரிவிப்பதாக இருந்தது.

### ஹமாஸ் சாசனம்

ஹமாஸ் தனது சாசனத்தை ஆகஸ்ட் 1988ஆம் ஆண்டு வெளியிட்டது, அதன் முக்கிய நோக்கமாக 'பாலஸ்தீனம் முழுவதுக்குமான ஓர் இஸ்லாமிய அரசை" அமைப்பதாகும்.

(மறுபக்கம் பார்க்க)

அடிப்படை ஆவணத்தில் பல யூத எதிர்ப்புக் கொள்கைகள் இடம்பெற்றிருந்தன.

அந்த சாசனமானது, இரு நாடுகள் என்ற தீர்வை நிராகரிக்கிறது மேலும் மோதலை 'ஜிஹாத் தவிர' தீர்க்க முடியாது என்று வெளிப்படையாகக் கூறுகிறது.

சாசனத்தின் ஆறாவது பிரிவானது, "முழு நிலமும் பேரம் பேச முடியாதது" என்று குறிப்பிடுகிறது.

மீண்டும் எழுதப்பட்டு கடந்த 2017-ஆம் ஆண்டு மே மாதம் வெளியான புதிய சாசனத்தில், ஹமாஸ், யூத எதிர்ப்பு என்பதைவிட சியோனிசத்திற்கு எதிரானது என பகிரங்கமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேல் அரசு சட்ட விரோதமானது மற்றும் முறைகேடானது என்றும், இஸ்ரேலையும் உள்ளடக்கி, மேற்குக் கரை மற்றும் காஸா பகுதி முழுவதையும் இஸ்லாமிய பாலஸ்தீன அரசாக்குவதே இலக்கு என்பதையும் மீண்டும் வலியுறுத்துகிறது.

**வன்முறை சித்தாந்தம்**

ஹராகாத் அல்-முகவாமா அல்-இஸ்லாமியா (இஸ்லாமிய எதிர்ப்பு இயக்கம்) என்பதன் அரபுச் சுருக்கமே "ஹமாஸ்". இஸ்ரேலுக்கு எதிரான முதல் கிளர்ச்சிக்குப் பிறகு 1987ல் அகமது யாசின் என்பவரால் இது தொடங்கப்பட்டது. யாசின், எகிப்தில் உள்ள முஸ்லிம் சகோதரத்துவத்தின் பாலஸ்தீனிய கிளையுடன் தொடர்புடைய ஒரு மதகுரு.

பாலஸ்தீன விடுதலை அமைப்பின் மதச்சார்பற்ற அணுகுமுறையை ஹமாஸ் கடுமையாக எதிர்த்தது. மேலும், பாலஸ்தீன பிரச்னையில் உண்மையான அக்கறை கொண்ட ஓர் அமைப்பாக தன்னை முன்னிறுத்திக் கொண்டது. மேலும், தனது நோக்கங்களை நிறைவேற்ற யோசிக்காமல் வன்முறை வழிகளைக் கையாண்டதுடன் பாலஸ்தீன இஸ்லாமிய ஜிஹாத்துக்கு எதிராகத் தன்னை இணைத்துக் கொண்டது.

மற்ற அரசியல், மத அமைப்புகளில் இருந்து தன்னை வேறுபடுத்திக்கொண்ட ஹமாஸ், இன்று பாலஸ்தீனத்தின் மிகப் பெரிய தீவிரவாதக் குழுவாகக் கருதப்படுகிறது. ஹமாஸ் 1993 ஏப்ரல் மாதத்தில் முதல்முதலாக தற்கொலைப் படைத் தாக்குதலை நடத்தியது.

பாலஸ்தீன விடுதலை அமைப்பின் தலைவர் யாசர் அராபத் மற்றும் இஸ்ரேலிய பிரதமர் யிட்சாக் ராபின் ஆகியோர் ஓஸ்லோ ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கு ஐந்து மாதங்களுக்கு முன்பு இந்த தாக்குதல் நடைபெற்றது.

இந்த ஒப்பந்தம் மேற்குக் கரை மற்றும் காஸா பகுதிகளில் பாலஸ்தீன அதிகாரம் என்ற தனி அரசை நிறுவியது.

பாலஸ்தீன விடுதலை அமைப்பு மற்றும் இஸ்ரேல் இரண்டும் ஒன்றையொன்று அங்கீகரிக்கும் இந்த உடன்படிக்கைக்கு ஹமாஸ் கண்டனம் தெரிவித்தது.

**ஆரம்ப காலத்தில்**

கடந்த 1970-ஆம் ஆண்டுகளின் பிற்பகுதியில், இஸ்லாமிய முஸ்லிம் சகோதரத்துவத்துடன் ஒன்றிணைந்த ஆர்வலர்கள், தொண்டு நிறுவனங்களை நிறுவி அதன் மூலம் பாலஸ்தீனத்தின் காஸா மற்றும் மேற்குக் கரையில் சிறிய மருத்துவமனைகள் மற்றும் பள்ளிகளைத் திறந்து பல் வேறு சமூக நடவடிக்கைகளை மேற்கொண்டனர். மேலும் காஸாவில், அவர்கள் பல மசூதிகளைக் கட்டுவதில் தீவிரமாக இருந்தனர், அதேவேளையில் மேற்குக் கரையில் பல்கலைக்கழகங்களைத் திறப்பது என்ற அளவில் நிறுத்திக்கொண்டனர்.

இந்த பகுதிகளில் முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் நடவடிக்கைகள் பெரும்பாலும் வன்முறையற்றவையாகவே இருந்தன. ஆனால், பல சிறிய குழுக்கள் இஸ்ரேலுக்கு எதிராக ஜிஹாத் அல்லது புனிதப் போருக்கு அழைப்பு விடுக்கத் தொடங்கின. இதற்கிடையே, முஸ்லிம் சகோதரத்துவ அமைப்பின் உறுப்பினர்கள் மற்றும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் மதப் பிரிவுகளால் உருவாக்கப்பட்ட ஹமாஸ் தொடங்கப்பட்டவுடன், பாலஸ்தீனத்தில் இஸ்ரேலுக்கு எதிரான உணர்வுகள் வலுப்பெறத் தொடங்கின.

ஹமாஸ் தனது 1988 சாசனத்தில், பாலஸ்தீனம் ஒரு இஸ்லாமிய நாடு என்றும், அது முஸ்லிம் அல்லாதவர்களிடம் ஒருபோதும் சரணடைய முடியாது என்றும், பாலஸ்தீனத்தை இஸ்ரேலிடம் இருந்து கைப்பற்றப் புனிதப் போரை நடத்துவது பாலஸ்தீன முஸ்லிம்களின் மதக் கடமை என்றும் கூறியது. ஆனால், ஹமாஸின் இந்த நிலைப்பாடு, பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினுடன் மோதலுக்கு வழிவகுத்தது. இதுவே 1988-ஆம் ஆண்டில் இஸ்ரேலின் இருப்புக்கான உரிமையை அங்கீகரித்தது. ஹமாஸ் பின்னர் தனது நிலைப்பாட்டை ஓரளவு திருத்தியமைத்துக் கொண்டது. ஆனாலும், இஸ்ரேலை அங்கீகரிக்க மட்டும் மறுத்துவிட்டது.



**கைப்பற்றப்பட்ட காஸா**

2006 ஆம் ஆண்டில், பாலஸ்தீன சட்டப்பேரவை தேர்தலில் ஹமாஸ் போட்டியிட்டு, 132 இடங்களில் 74 இடங்களை வென்றது. இந்த வெற்றி, அந்த நேரத்தில் பாலஸ்தீன அதிகாரத்தை வைத்திருந்த ஃபதாவைத் தோற்கடிக்க உதவியது. இது ஹமாஸ் மற்றும் யாசர் அராஃபத் நிறுவிய ஃபதா கட்சிக்கு இடையே அதிகாரப் போட்டிக்கு வித்திட்டது.

காஸாவை ஹமாஸ் கைப்பற்றியது மிகப் பெரிய வன்முறையாக மாறியிருந்தது. ஹமாஸ் போராளிகள் காஸா பகுதியைக் கைப்பற்றி ஃபதா அதிகாரிகளை வெளியேற்றினர். இரு குழுக்களுக்கு இடையேயான சண்டை 2007 ஆம் ஆண்டு ஜூன் 10 முதல் 15ஆம் தேதி வரை நீடித்தது. இதனால், ஐக்கிய அரசம் கலைக்கப்பட்டது. இதன் மூலம் பாலஸ்தீனப் பகுதிகள் இரண்டாகப் பிரிந்தன. ஒன்று, பாலஸ்தீன தேசிய ஆணையத்தால் நிர்வகிக்கப்படும் மேற்குக் கரையாகவும், மற்றொன்று ஹமாஸால் ஆளப்படும் காஸாவாகவும் உருவானது.

**தலைவர்கள்**

ஹமாஸின் நிறுவனர் யாசின் தனது 12 வயதில் நேரிட்ட விபத்தினால் மாற்றுத் திறனாளியாகி, சக்கர நாற்காலியில் தான் இருந்தார். 2004 ஆம் ஆண்டு காஸா நகரில் தொழுகையின்போது யாசின் மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் அவர் கொல்லப்பட்டார். இவருக்குப் பிறகு ஹமாஸின் இராணுவப் பிரிவான அல்-கஸ்ஸாம் படைப்பிரிவின் ஆரம்ப கால தலைவர்களில் ஒருவரான சலா ஷெஹாடே இருந்தார். 1996 இல் ஹமாஸ் இராணுவத் தலைவரும் வெடிகுண்டு நிபுணருமான யாஹ்யா அயாஷ் இறந்த பிறகு, ஷேஹாட் முகமது டெய்ஃ புடன் இணைந்து குழுவில் ஒரு தலைவரானார். இவரும் 2002 ஆம் ஆண்டு நடந்த வான்வழித் தாக்குதலால் வெளியேற்றப்பட்டார்.

ஹமாஸின் தற்போதைய தலைவர்கள் யாஹ்யா சின்வார், முகமது டெய்ஃப் மற்றும் இஸ்மாயில் ஹனியே ஆகியோர் இருந்தனர்.

இவர்களில் யாஹ்யா மற்றும் முகமது டெய்ஃப் ஆகியோர், காஸா மக்களை, இஸ்ரேலின் தாக்குதலுக்கு இரையாக்கி விட்டு, காஸாவில் உள்ள ஒரு சுரங்கப் பாதையில் பத்திரமாக இருப்பதாக நம்பப்படுகிறது, ஹனியே, காஸாவுக்கு வெளியே, கெய்ரோவிலும் தோஹாவிலும் மாறி மாறி இருக்கிறார் என்றும் கூறப்படுகிறது.

இவர்களில், ஹமாஸ் அரசியல் தலைவர் இஸ்மாயில் ஹனியே, நன்கு அறியப்பட்ட தலைவர். ஹமாஸ் குழு 2006 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற வெற்றியைத் தொடர்ந்து பாலஸ்தீனப் பிரதமராக மிகக் குறைந்த காலம் பதவி வகித்தவர்.

"ஊழியர்களின் தலைவர்" என அறியப்படும் முகமது டெய்ஃப், 2015 ஆம் ஆண்டு முதல் அமெரிக்க சர்வதேச பயங்கரவாதிகளின் பட்டியலில் இடம்பெற்றுள்ளார். அக்டோபர் 7 ஆம் தேதி, இஸ்ரேல் மீது ஹமாஸ் தாக்குதல் தொடங்குவதாக டெய்ஃப் தான் ஆடியோ செய்தி மூலம் அறிவித்தார்.

டெய்ஃப், 2002ஆம் ஆண்டு சலா ஷெஹாடே இறந்த பிறகு ஹமாஸின் இராணுவப் பிரிவின் தலைவராக நியமிக்கப்பட்டார். 61 வயதான சின்வார், ஹமாஸ் ராணுவப் பிரிவின் முன்னாள் தளபதி. ஹமாஸால் சிறைப்பிடிக்கப்பட்ட பிரெஞ்சு - இஸ்ரேலிய சிப்பாய் கிலாட் ஷாலித் விவகாரத்தில் கைதி பரிமாற்றத்தின்போது 2011 ஆம் ஆண்டு விடுவிக்கப்படுவதற்கு முன்பு சின்வார் சுமார் 23 ஆண்டுகள் இஸ்ரேலிய சிறைகளில் அடைக்கப்பட்டிருந்தார். அமெரிக்காவின் தேடப்படும் "சர்வதேச பயங்கரவாதிகள்" பட்டியலில் சின்வாரும் உள்ளார்.

**இவர்களுக்கு நிதியளிப்பது யார்?**

ஈரானிடம் இருந்து ஹமாஸ் நிதியுதவி பெறுவதாகக் கூறப்படுகிறது. இதுதவிர, ஈரானில் இருந்து சூடான் மற்றும் எகிப்து வழியாக ராக்கெட்டுகள் மற்றும் பிற வெடிபொருள்களும் அனுப்பப்படுவதாகவும் நம்மப்படுகிறது. இவை அனைத்தும் சினாய் தீபகற்பத்திலுள்ள சுரங்கப் பாதைகள் வழியாக காஸாவிற்குள் நுழைகின்றன. லெபனானில்தான் ஹமாஸ் படையினர் குண்டுகளைத் தயாரிக்கும் தொழில்நுட்பத்தையும், தற்கொலைத் தாக்குதல் நடத்துவதற்கான பயிற்சிகளையும் பெற்றனர்.

**சிக்கலின் தோற்றம்!**

இஸ்ரேல் - பாலஸ்தீன மோதலின் வரலாறு என்ன?

இன்று நாம் காணும் இஸ்ரேலும் பாலஸ்தீனமும் 1948 வரை பாலஸ்தீனமாக ஒரே பகுதியாகத்தான் இருந்தது. பாலஸ்தீனத்தை 1900-களில் ஒட்டோமன் பேரரசர் ஆட்சி செய்து வந்தார். முதலாம் உலகப் போரில் பேரரசை வீழ்த்தி ஆட்சியை பிரிட்டன் கைப்பற்றியது. அந்த சமயத்தில், பாலஸ்தீனத்தில் அரேபியர்கள் பெரும்பான்மையுடனும், யூதர்கள் சிறுபான்மையாகவும் வசித்து வந்தனர். இதற்கிடையே, பாலஸ்தீனத்திற்கு யூதர்கள் அதிகளவில் குடியேறத் தொடங்கியதால் பதற்றம் அதிகரித்தன.

**பால்ஃபோர் பிரகடனம் என்றால் என்ன?**

பிரிட்டனின் வெளியுறவுச் செயலாளர் ஆர்தர் பால்ஃபோர், 1917-ஆம் ஆண்டு பாலஸ்தீனத்தை யூதர்களின் தாயகமாக நிறுவதற்கு தனது ஆதரவை வெளிப்படுத்தி யூதர்களின் முக்கியத் தலைவரான பரோன் லயோனல் வால்டர் ரோத்ஸ்சைல்டுக்கு கடிதம் எழுதினார். இந்த கடிதம் பால்ஃபோர் பிரகடனம் என்று கூறப்படுகிறது.

இந்த பிரகடனமானது பாலஸ்தீனத்துக்கான பிரிட்டிஷ் ஆணையில் சேர்க்கப்பட்டு, பின்னர் 1922-ல் லீக் ஆஃப் நேஷனால் (தற்போது ஐ.நா. அவை) அங்கீகரிக்கப்பட்டது.

**இரண்டாம் உலகப் போரின்போது என்ன நடந்தது?**

இரண்டாம் உலகப் போரின்போது ஐரோப்பாவில் ஆயிரக்கணக்கான யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர். இதன் காரணமாக 1920 முதல் 1940 வரையிலான காலகட்டத்தில், ஐரோப்பாவை விட்டு வெளியேறி பல்லாயிரக்கணக்கான யூதர்கள் பாலஸ்தீனத்தில் குடிபெயர்ந்தனர். இதனால் யூதர்கள் - அரேபியர்களுக்கு இடையே வன்முறைகள் அதிகரித்தன.

**ஐநாவின் முன்மொழிவு என்ன?**

யூதர்கள் - அரேபியர்களுக்கு இடையே வன்முறை அதிகரித்ததால் பாலஸ்தீனத்தை இரண்டாகப் பிரிக்கும் திட்டத்தை 1947-ல் ஐ.நா. அவை வகுத்தது.

யூதர்களுக்கு ஒரு நாடு, அரேபியர்களுக்கு ஒரு நாடு. அரேபியர்கள், கிறிஸ்துவர்கள் மற்றும் யூதர்களின் மத முக்கியத்துவம் வாய்ந்த ஜெருசலேமை சர்வதேச மண்டலமாக மாற்ற முன்மொழியப்பட்டது.

இதனை யூதர்கள் ஏற்ற நிலையில், அரேபியர்கள் ஏற்க மறுத்ததால் செயல்படுத்த முடியவில்லை.

**இஸ்ரேல் எப்போது உருவாக்கப்பட்டது?**

இரு சமூகத்தினரிடையே அதிகரித்த மத வன்முறைகளை கட்டுப்படுத்த தவறியதால், பாலஸ்தீனத்தை ஆட்சி செய்த பிரிட்டன் வெளியேறியது. யூதர்களும் இஸ்ரேல் என்ற தனி நாட்டை உருவாக்குவதாக அறிவித்தனர்.

இந்த நிலையில், இஸ்ரேல் உருவாக்கப்பட்ட அடுத்த நாளே, புதிய நாட்டை விரும்பாத எகிப்து, இராக், ஜோர்தான், லெபனான் மற்றும் சிரியா ஆகிய 5 நாடுகளும் இஸ்ரேல் மீது போர் தொடுத்தன.

**போருக்குப் பிறகு என்ன நடந்தது?**

இந்த போரில் வெற்றி பெற்றதை தொடர்ந்து ஜெருசலேமின் மேற்குப் பகுதியையும், பாலஸ்தீனத்தின் பெரும் பகுதியையும் தனது கட்டுப்பாட்டுக்குள் இஸ்ரேல் கொண்டு வந்தது. பல பாலஸ்தீன மக்கள் தங்களின் வீடுகளைவிட்டு வெளியேற்றப்பட்டனர்.

காஸா நகரம் எகிப்தின் கட்டுப்பாட்டிலும், மேற்கு கரை ஜோர்தானின் கட்டுப்பாட்டிலும் இருந்தது.

**1967 போரில் என்ன நடந்தது?**

அரபு நாடுகளுடன் 1967-ல் நடந்த போரில் வெற்றி பெற்ற இஸ்ரேல், கிழக்கு ஜெருசலேம் மற்றும் மேற்குக் கரையைக் கைப்பற்றியது. மேலும், சிரிய கோலன் குன்றுகள், காஸா மற்றும் எகிப்திய சினாய் தீபகற்பத்தின் பெரும்பாலான பகுதிகளையும் கைப்பற்றியது.

பெரும்பாலான பாலஸ்தீன அகதிகள் இன்னும் காஸா மற்றும் மேற்குக் கரையில் வசித்து வருகின்றனர்.

ஜெருசலேமை தலைநகராக இஸ்ரேலும், கிழக்கு ஜெருசலேமை தலைநகராக பாலஸ்தீனமும் உரிமை கோரி வருகின்றன. இந்த நிலையில், கிழக்கு ஜெருசலேம் மற்றும் மேற்குக் கரையில் யூதர்களுக்கான குடியேற்ற பகுதிகளை இஸ்ரேல் உருவாக்கியது. இது சர்வதேச அமைப்புகளால் சட்டவிரோதமெனக் கருதப்படுகிறது.

# ரணிலின் வாக்குறுதிகள் காற்றில் பறந்துவிட்டன!

## மனோ கணேசன் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக். 19

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த காலத்தில் வழங்கிய அனைத்து வாக்குறுதிகளும் காற்றில் பறந்துள்ளதாகவும் அன்று அவர் கூறியதற்கும் இன்று அவர் நடந்து கொள்வதற்கும் பெரும் வேறுபாடுகள் உள்ளதாகவும் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும்,பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில், நடைபெற்ற, தமிழ் முற்போக்கு கூட்டணி அரசியல் குழு கூட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இந்நாட்டில் சுதந்திரம் பெற்றோம் என நாம் கொண்டாடும் பெப்ரவரி 4ம் திகதிக்கு முன் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணப்படும் என ஜனாதிபதி விக்ரமசிங்க வாக்குறுதி அளித்திருந்தார். 13ஆவது திருத்தச்சட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் வாக்குறுதி அளித்தார்.

13 இல் பொலிஸ், காணி அதிகாரங்கள் முழுமையாக அமுல்படுத்தப்படாது என்றும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். எம்.பி விக்கினேஸ்வரனை துணைக்கு அழைத்துக்கொண்டு வடக்கில் மாகாண நிர்வாகக் குழு அமைப்போம் என வாக்குறுதி அளித்தார். தொல்பொருள் திணைக்களத்தை அழைத்து காணிகளை விடுவியுங்கள் என கட்டளை இட்டார். திணைக்களத்தின் பணிப்பாளர் பதவி விலகினாரே தவிர ஜனாதிபதியின் கட்டளை நிறைவேறவில்லை.

தற்போது தேர்தல்களை பிற்போட சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் என்று அரசாங்கம் கூறுகிறது. ஜனாதிபதி நேரடியாக சொன்னாலும், அவருக்கு நேரடி நெருக்கமாக அவரது அரசில் இருப்போர் சொன்னாலும் எமக்கு ஒன்றுத்தான்.

இப்போது ஜனாதிபதி முறைமையை அகற்றப் போகிறேன் என்கிறார். முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரியவை துணைக்கு அழைத்துக் கொண்டு பாராளுமன்ற தேர்தல் முறையை மாற்றி தமிழ் பேசும் பிரதிநிதித்துவங்களுக்கு ஆப்பு வைப்பேன் என சொல்லாமல் சொல்கிறார்.

ஸ்கொட்லன்ட் யார்ட் பொலிசை அழைத்து, உயிர்த்த ஞாயிறு குண்டு வெடிப்பு விசாரணையை கையளிப்போம் என பாராளுமன்றம் வந்து வாக்குறுதி அளித்திருந்தார். இப்போது ஜேர்மனிக்கு போய் சர்வதேச விசாரணைக்கு அனுமதிக்கமாட்டோம் என்கிறார். விசாரணைகளுக்காக உள்ளூரில் மீண்டும் பாராளுமன்ற தெரிவுக்குழுவை அமைப்பதாக சொல்கிறார்.

பெருந்தோட்ட துறையில் காணி பிரச்னைக்கு இதோ தீர்வு, அதோ தீர்வு என்று சில அமைச்சர்கள் கூறினார்கள். ஆனால், எதனையும் செய்யவில்லை.

இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதே பாராளுமன்றத்தில், பிரதமராக சில காலம் இருந்தபோது, பாராளுமன்றத்தில் நான் எழுப்பிய கோரிக்கையை ஏற்று, உடனடியாக பெருந்தோட்டங்களில் உள்ள பயிரிடப்படாத தரிசு நிலங்களை பிரித்து பெருந்தோட்ட குடும்பங்களுக்கு வழங்குகிறேன் என வாக்குறுதி அளித்தார்.

அதற்கு "மனோ கணேசன் திட்டம்" என பெயரும் வைக்கிறேன் எனவும் பகிரங்கமாக பாராளுமன்றத்தில் வாக்குறுதி வழங்கினார். "ஐயா சாமி, எனது பெயர் வேண்டாம், எனது மக்களுக்கு காணி உரிமையை கொடுங்கள். அது போதும்" என்று அப்போதே நான் திருப்பி அவருக்கு பதிலளித்தேன். இன்று அந்த வாக்குறுதிக்கு என்ன நடந்தது?

கடைசியாக இப்போது மயிலத்தமடு கால்நடை மேய்ச்சல் தரை விவகாரம் தொடர்பில், அதிகாரிகளை அழைத்து பணிப்புரை விடுத்தார். ஆனால், அங்கே புத்தர் சிலையை கொண்டு வந்து நிறுத்தி உள்ளார்கள். அங்குள்ள அம்பிட்டிய பிக்கு வாயை திறந்தால் தெருச்சண்டைக்காரர் போன்று பேசுகிறார்.



மேய்ச்சல் தரையில் பாரம்பரியமாக கால்நடை வளர்ப்பில் ஈடுபட்டு வந்த மக்களுக்கு நிலம் கையளிக்கப்படுவது ஒரு புறம் இருக்க, இப்போது கௌதமரையும் அங்கே இவர்கள் கொண்டு வந்து நிறுத்தி இருப்பது, மயிலத்தமடு, "மாடு"களுக்கே அடுக்காது - என்றார். (அ)

## கிழக்கு மாகாணத்தில் பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்க்க விண்ணப்பம் கோரல்

மட்டக்களப்பு, ஒக். 19

கிழக்கு மாகாண பட்டதாரிகளை ஆசிரியர் சேவைக்குள் உள்ளீர்ப்பதற்கான விண்ணப்பங்களை கிழக்கு மாகாண பொது சேவை ஆணைக்குழுவின் பதில் செயலாளர் ஆ.மன்சூர் கோரியுள்ளார்.

விண்ணப்ப முடிவுத்திகதி நவம்பர் 6ஆம் திகதியாகும்.

கிழக்கு மாகாணத்தில் வதியும் 18-35 வயதுக்குட்பட்ட ஆண் பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம். (அ)

